செங்குந்த மித்திரன்

மலர்:21 இதழ்: 8 | ஆகஸ்ட் – 2021 | Date of Publication 25th day of Every month | தனிப்பிரதி விலை: ₹ 15/–

செங்குந்தர் குலச் செம்மல்

திரு. இ.எஸ்.தியாகராஜன் செங்குந்தர்

வாழ்க வாழ்க
செங்குந்தர்!

வெல்க வெல்க
செங்குந்தம்!!

செங்குந்தர் உறுதிமொழி

நாம் செங்குந்த குலக்கடவுள் அருள்மிகு முருகப்பெருமான் ஆணையாக, மனசாட்சியுடன் கீழ்க்கண்டவாறு உறுதி பூணுகிறோம்.

1. நாம் இந்தியக் குடிமக்களாய் இருப்பதை, பெருமையாகக் கருதுகிறோம். நமது நாட்டின் அரசியல் அமைப்புச் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, நாட்டின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபடுவோம்.
2. நாம், செங்குந்தர் என்ற உணர்வுடன் ஒன்றுபட்டு, நமது சங்கத்தின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு சமூக, பொருளாதார, கல்வி, தொழில், கலாச்சார முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோம். சமூக நலம் காப்போம்.
3. நாம் மற்ற இனத்தவரிடம், மனித நேயம் கொண்டு, நட்புடனும், அன்புடனும் பழகுவோம்.
4. நாம், நமது உரிமைகளைப் பாதுகாக்க எப்பொழுதும் விழிப்புடன் செயல்படுவோம்.
5. நாம் நமது சங்கம் நிறுவிய சான்றோர்களை நினைவில் கொண்டு, சங்கத்தை நாளும் வளர்த்திடுவோம்.

தலைவர் மடல்

உலகிலேயே செய்கூலி, சேதாரமின்றி கிடைக்கும் ஒரே நகை புன்னகை மட்டுமே. அந்தப் புன்னகையை தன் வசமாக்கி வைத்திருக்கும் செங்குந்த சொந்தங்களுக்கு வணக்கம்.

உப்பும் உரிமையும் அதிகம் எடுத்தால் உணவும் உறவும் கசந்து போகும் என்பதைப் போல, எவ்வளவுதான் உறவுகளுக்காக நாம் அனுசரித்து வாழ்ந்தாலும், சில தருணங்களில் நாம் நமக்காக வாழ்ந்திருக்கலாம் என்ற விரக்தியை நம் உறவுகளே நமக்கு புகுத்தி விடுகிறார்கள்.

எத்தனை பேர் என்ன சொன்னாலும் நமக்குப் பிடித்தது போல் நாம் வாழ்வதிலேதான் உள்ளது நமக்கென்றொரு அடையாளம்.

வருகின்ற செப்டம்பர் மாதத்தில் அறிஞர் அண்ணா, சிவத்திரு ஜெ.சுத்தானந்தன் ஆகியோரது பிறந்த நாட்களை அரசின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி கொண்டாடுவதோடு, நமது சங்க நிறுவனர் வள்ளல் தி.நா.சபாபதி செங்குந்தர் நினைவு நாளில் அவரை வணங்குவோமாக!

**தன்னைத்தானே சரிசெய்து கொள்ள
முயலுங்கள்...
அதைவிட சிறந்த மாற்றம்
வேறொன்றுமில்லை..**

அன்புடன்,

KPK செல்வராஜ்



அருள்மிகு வரசித்தி செல்வ விநாயகர் திருக்கோயில்

எந்த ஒரு செயலையும் தொடங்குவதற்கு முன்பாக, விநாயகப்பெருமானை வணங்கிவிட்டு தொடங்குவது வழக்கம். அப்படிச் செய்வதால், செய்யும் காரியம் எதுவாக இருந்தாலும் தடங்கல்கள் இன்றி நல்லபடியாக நடந்தேறும் என்பது வழிவழியாக தொடர்ந்து கொண்டிருக்கும் நம்பிக்கை. ஒரு சிலர் காகிதத்தில் எழுதத் தொடங்கும் போது கூட, பிள்ளையார், சுழி போட்டு எழுதத் தொடங்குவதை வழக்கமாக வைத்திருப்பார்கள். கீர்த்தி கொண்ட மகாகணபதி எழுந்தருளியிருக்கும் கோவில்களில் ஒன்று, வேலூர் அருகில் அமைந்துள்ள சேண்பாக்கம். ஒரே கருவறையில் பதினோரு சுயம்பு லிங்கங்களாக விநாயகப்பெருமான் திருவருள் புரிகிறார்.

விநாயகப் பெருமான், அகிலத்தையே தன் கட்டைவிரல் அசைவில் வைத்திருக்கும் சிவபெருமானின் மூத்த மகனாக போற்றப்படுகிறார். முருகப்பெருமானுடைய அண்ணனாக வணங்கப்படுகிறார். அதே நேரத்தில் 'ஓம்'கார தத்துவத்தையே, தலையாக கொண்டிருக்கும் விநாயகர் மூல முதல்வனாகவும், ஞான முதல்வனாகவும் பக்தர்களால் வழிபடப்படுகிறார்.



சேண்பாக்கம்

அருள்மிகு வரசித்தி செல்வ விநாயகர்

'பிடித்து வைத்தால் பிள்ளையார்' என்பது சொல் வழக்கு. எந்த பொருளிலும் விநாயகரை செய்துவைத்து வழிபட முடியும். இருப்பினும் விநாயகப் பெருமானின் புகழ்பாடும் அற்புத ஆலயங்கள், தமிழக மெங்கும் பரவிக்கிடக்கின்றன. பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர், பேராவூரணி நீலகண்ட பிள்ளையார், முக்குறுணி விநாயகர், கள்ள வாரணப் பிள்ளையார் என்று பல பெயர்களிலும் கணபதி பெருமான் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார்.

அப்படிப்பட்ட அற்புத கீர்த்தி கொண்ட மகாகணபதி எழுந்தருளியிருக்கும் கோவில்களில் ஒன்று, வேலூர் அருகில் அமைந்துள்ள சேண்பாக்கம். ஒரே கருவறையில் பதினோரு சுயம்பு லிங்கங்களாக விநாயகப்பெருமான் திருவருள் புரிகிறார். இந்த ஆலயத்தின் பிரதான விநாயகராக 'செல்வ விநாயகர்' அருள்கிறார். தலமரமாக வன்னிமரம் போற்றப் படுகிறது. இது மிகவும் தொன்மையான தலம் என்று கூறப்படுகிறது.

பெயர்க்காரணம்

ஆரம்ப காலத்தில் செண்பக காடாக இருந்ததால் இப்பகுதி 'செண்பகவனம்' என அழைக்கப்பட்டு, பின் அதுவே மருவி 'சேண்பாக்கம்' என்று அழைக்கப்பட்டதாக பெயர்க் காரணம் சொல்லப்படுகிறது. மேலும் இத்தலத்தில் சுயம்புவாக விநாயகர் இருப்பதால் 'ஸ்வயம்பாக்கம்' என்று அழைக்கப்பட்ட இந்த பகுதி, பிற்காலத்தில் 'சேண்பாக்கம்' என்று மருவியதாகவும் கூறுகிறார்கள்.

தல வரலாறு

மராட்டிய அமைச்சரான துக்காஜி, தனது தேரில் இவ்வழியாக சென்று கொண்டிருந்தார். ஓரிடத்தில் சக்கரத்தின் அச்சு முறியவே கீழே இறங்கி பார்த்தார். சக்கரத்தின் கீழிருந்து ரத்தம் கொப்பளித்தது. பயந்து போனார் துக்காஜி. அப்போது விநாயகர் அசரீரியாக 'இவ்விடத்தில் ஏகாதச வடிவில் நான் இருக்கிறேன். என்னை

வெளிக்கொண்டு வந்து ஆலயம் எழுப்பு' என்று ஆணையிட்டார்.

அதன்படி இவ்விடத்தில் லிங்க வடிவில் இருந்த 11 விநாயகர்களையும் எடுத்து பிரதிஷ்டை செய்தார் துக்காஜி. மூலவரான செல்வ விநாயகரின் முதுகின் வலது பக்கத்தில் தேர் சக்கரம் ஏறிய வடு இருப்பதை இப்போதும் பார்க்க முடியும்.

ஆதிசங்கரருக்கு சுயம்பு மூர்த்தங்களை தரிசனம் செய்வதில் மிகவும் விருப்பம். சேண்பாக்கத்தில் 11 சுயம்பு மூர்த்திகள் இருப்பதை அறிந்து அவர் இத்தலத்திற்கு வந்தார். 11 சுயம்பு மூர்த்திகளும் லிங்க வடிவிலேயே இருப்பதைக் கண்டார். பின் தன் ஞானதிருஷ்டியால் அனைத்து லிங்கங்களும் விநாயகரே என்பதை அறிந்தார். சுயம்பு மூர்த்திகளுக்கு எதிரில் ஈசான்ய மூலையில் ஸ்ரீசக்கரம் பிரதிஷ்டை செய்தார். ஆதிசங்கரரும் இந்த ஆலயத்தை வழிபட்டிருக்கிறார் என்பதிலிருந்தே இந்தக் கோவிலின் பழமையும் சிறப்பும் விளங்கும்.

கோவில் அமைப்பு

கோபுர வாயிலிலிருந்து நேரே கருவறைக்குள் செல்ல எங்குமே பார்க்க முடியாத அரிய சுயம்பு விநாயக மூர்த்திகள் பூத்திருப்பது பார்க்க உடல் சிலிர்த்துப் போடுகிறது. வீட்டின் நடுவே முற்றம்போல ஓரிடத்தில் குடிகொண்டிருப்பதைக் காணகண்கோடி வேண்டும். பிரபஞ்ச மூலத்தின் முழுச்சக்தியையும் ஓரிடத்தில் குவிக்கப்பட்டது போன்றிருக்கும் மகத்தான அதிர்வுகள் கொண்ட வலிமையான சந்நதி அது. இடது ஓரத்தில் பாலவிநாயகராக பூமியிலிருந்து பொங்கிய மூர்த்தி , நடன விநாயகர், ஓம்கார விநாயகர், கற்பக விநாயகர், சிந்தாமணி விநாயகர், செல்வ விநாயகர், மயூர விநாயகர், மூஷிக விநாயகர், வல்லப விநாயகர், சித்திபுத்தி விநாயகர், பஞ்சமுக விநாயகர் என்று வரிசையாக வளைந்து ஓம் வடிவத்தில் இருக்கும் அற்புதம் மனதை கொள்ளை கொள்ளும். விநாயகர் அருவமும், உருவமுமானவர்

எனும் தத்துவத்தை கண்முன் நிறுத்தி, தத்துவங்கள் சொல்லும் ஞான மூர்த்திகள் அவை.

ஏனெனில் அங்குள்ள விநாயகர்களில் சிலை எந்த உருவமுமற்று கோளமாய் இருக்கிறது. ஆனாலும், உற்றுப்பார்க்க விநாயகரின் திருவுருவம் நிழலாய் மறைந்திருப்பதுதான் சேண்பாக்கத்தின் சிறப்பம்சம். ஆறாவதாக உள்ள செல்வ விநாயகர் தினமும் அபிஷேகம் பெறுகிறார்.

இத்தலத்துக்கு சிகரம் வைத்ததுபோல் கொடிமரம் கருவறையிலேயே இருப்பதும், கருவறை மேற்கூரையற்று திறந்த வெளியில் இருப்பதுவுமேயாகும். ஏனெனில், இன்றும் வான்வழியே தேவர்கள் கருவறைக்குள் இறங்கி இத்தல கணபதியை பூஜிப்பதால் மேல் விமானம் இல்லாது இருக்கிறது என்கிறார்கள்.

ஆலயத்தில் நவக்கிரக மேடை அமைந்துள்ளது. இதில் இருக்கும் சனி பகவான், விநாயகரைப் பார்ப்பது போல் அமைந்திருப்பது தனிச் சிறப்பு. திருமணத் தடை உள்ளவர்கள், குழந்தை இல்லாதவர்கள், சங்கடஹர சதுர்த்தி நாளில் விரதம் இருந்து தீபம் ஏற்றி விநாயகரை வழிபாடு செய்தபின், ஆதிசங்கரர் ஸ்ரீசக்கரம் அமைத்துள்ள இடத்திலுள்ள நவக்கிரகத்தையும் வழிபட்டால் பலன் கிடைக்கும் என்பது நம்பிக்கை. குழந்தைகளுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டால் பாலவிநாயகருக்கு பால் அபிஷேகம் செய்கிறார்கள். விநாயகருக்கு அபிஷேகம் செய்தும், வஸ்திரம் அணிவித்தும் நேர்த்திக்கடன் நிறைவேற்றலாம்.

தரிசன நேரம்

இந்த ஆலயம் தினமும் காலை 6 மணி முதல் 11.30 மணி வரையும், மாலை 4.30 மணி முதல் இரவு 8 மணி வரையும், பக்தர்கள் தரிசனத்திற்காக திறந்திருக்கும்.

வழித்தடம்

செல்வவிநாயகர் கோவில் என்று அழைக்கப்படும் இத்தலம், வேலூர் நகருக்கு வடமேற்கில் வேலூரில் இருந்து பெங்களூரு செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் இருந்து பிரிகின்ற பாதையில் 1 கிலோமீட்டர் தொலைவில் பாலாற்றின் தென்கரையில் சேண்பாக்கம் என்னும் ஊரில் அமைந்துள்ளது.

கருத்தோவியம்: சிவன்மலை பித்தன் நடராசன்



வாய்மையே வெல்லும்

அறிவு உடைமை
(கல்வி கேள்விகளால் அறிவு உடையவர் ஆதல்)

423

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு.	எந்தப் பொருளை,யார்யார் வாயிலாகக் கேட்க நேர்ந்தாலும்,சொல்வோரின் இயல்பை நோக்காமல், சொல்லுகின்ற பொருளின் உண்மைத் தன்மையைக் காண்பதே அறிவு ஆகும்.

திருக்குறள் கதை

கதை: பேராசிரியர் கா.முருகேசன், சென்னை

பண்ணையில் வசித்த ஒரு கோழிக் குஞ்சு இரை தேட ஒருநாள் வெளியில் வந்தது.

இரைதேடிச் சென்றுகொண்டிருந்தபோது அதன்மீது சில கற்கள் வந்து விழுந்தன. அதைப் பார்த்த கோழிக் குஞ்சு, "அடடா வானம் இடிந்து விழுகிறது" என்று எண்ணியது. இதுபற்றி சிங்கராஜாவிடம் போய் கூறவேண்டுமென்று புறப்பட்டு, வேகமாக நடந்தது. போகிற வழியில் அன்னப் பறவையையும், பின் வாத்து மற்றும் வான்கோழியையும் பார்த்தது.

"ஏன் இப்படி ஓடி வருகிறாய்?" என்று அவைகள் கேட்டபோது, "வானம் இடிந்து விழுகிறது, என்மேல் கூட சில பாறை துகள்கள் விழுந்தன, நான் போய் சிங்கராஜாவிடம் தகவல் சொல்லப் போகிறேன். அவரால்தான் நம்மைக் காப்பாற்றமுடியும்" என்று கூறியது.

கோழிக்குஞ்சு கூறியதை மூன்று பறவைகளும் நம்பி, கூடவே ஓடின.

வழியில் ஒரு நரி தென்பட்டது. அது பறவைகளை நிறுத்தி, "ஏன் இப்படி அவசரமா ஓடுகிறீர்கள்?" எனக் கேட்டது.

கோழிக்குஞ்சு நடந்ததைச் சொன்னது. உடனே அந்த நரி தந்திரமாக "இப்படி மெதுவாகப் போனால் வானம் உங்கள் தலையில் விழுந்துவிடும். எனக்கு குறுக்குப் பாதை தெரியும். அதில் விரைவாகப் போகலாம்" என்றது.

அதை நம்பிய பறவைகள் நரியைப் பின்பற்றி ஓடின. ஓடிய நரி தன்னுடைய குகையைக் காட்டி இதுதான் சிங்க குகை, உள்ளே போங்கள் என்றது. பறவைகளும் நம்பி நுழைந்தன. உள்ளே இருந்த நரிகள் பறவைகளைத் துரத்தி துரத்தி வேட்டியாடின. அதில் கோழிக் குஞ்சு மட்டும் ஒளிந்து மறைந்து எப்படியோ தப்பி தன் பண்ணைக்கு ஓடி வந்து சேர்ந்தது.

அங்கிருந்த மற்றொரு கோழிக்குஞ்சு, "பலர் ஒரு விஷயத்தை சரி என்று சொன்னாலும், அதில் இருக்கும் உண்மையைக் கண்டுபிடிப்பதுதான் அறிவாகும்" என்று புத்திமதி சொன்னது.

பாராட்டு - பரிசளிப்பு

ஆகஸ்ட் மாதம் 25 முதல் 28 வரை நேபாளத்தில் நடைபெற்ற சர்வதேச அளவிலான குத்துச் சண்டைப் போட்டியில் 23 நபர்கள் கலந்து கொண்ட 55 கிலோ எடைப் பிரிவில் வெற்றிபெற்று தங்கப்பதக்கம் பெற்ற திருப்பூரைச் சேர்ந்த செங்குந்தர் குலச் செல்வி P.ஹரிணி தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் கைத்தறிக் கதிரவன் K.P.K.செல்வராஜ் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டார். தலைவர் பாராட்டி சிறப்புப்பரிசு வழங்கி கௌரவித்தார், திருப்பூர் தாலுக்கா சங்க செங்குந்த மகாஜன நிர்வாகிகள் உடனிருந்தனர்.

செங்குந்த மித்திரனில் விளம்பரம் செய்யுங்கள்!

உங்கள் இல்லத் திருமண விழா, காதணி விழா, புதுமனை புகுவிழா, பிறந்த நாள் விழா போன்ற சுபநிகழ்ச்சிகளை செங்குந்த மித்திரன் இதழில் விளம்பரமாக வெளியிடலாம்.

முழுப்பக்கம் (கலர்) (140mm X 200mm) - ரூ. 5,000

அரைப்பக்கம் (கலர்) (140mm X 100mm) - ரூ. 2,500

கண்ணீர் அஞ்சலி முழுப்பக்கம் (B&W) - ரூ. 3,500

மேலும் விபரங்களுக்கு தலைமைச் சங்க அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட கிளைச் சங்கங்கள் நடத்தும் திருமணத் தகவல் மையத்தின் விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன.
தனி நபர்கள் நடத்தும் திருமணத் தகவல் மையத்தின் விளம்பரத்திற்கு அனுமதி இல்லை.

வாழ்த்துக்கள்

தேசிய அளவிலான குத்துச்சண்டைப் போட்டி ஜூலை 30, 31–ல் டெல்லியில் நடைபெற்றது. இதில் 6 மாநிலங்களைச் சேர்ந்த 80 வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். 19 வயதிற்கு உட்பட்டோருக்கான 55 கிலோ எடைப்பிரிவில் தமிழகத்தின் சார்பில் கலந்துகொண்ட திருப்பூரைச் சேர்ந்த **திரு. ச.பழனிச்சாமி செங்குந்தர்** மகள் செங்குந்தர் குலச் செல்வி **P.ஹரிணி** தங்கப்பதக்கம் பெற்றமைக்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு இராஜாக்கவுண்டம்பாளையத்தில் 20.08.2021 அன்று நடைபெற்ற அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருக்கோயில் கும்பாபிஷேக விழாவில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத் தலைவர் கைத்தறிக் கதிரவன் K.P.K.செல்வராஜ், தெ.செ.ம.சங்கத்தின் துணைத் தலைவர் பேராசிரியர் A.பாலதண்டபாணி ஊர் நாட்டாண்மைகாரர் காரியக்காரர்கள், கிளைச் சங்கத் தலைவர் ச.கண்ணன் மற்றும் செங்குந்த சொந்தங்கள் சமூக இடைவெளியைப் பின்பற்றி திரளாகப் பங்கேற்றனர்.

யாளி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.,
YALEY CHITFUNDS (P) LTD.,

GSTIN: 33AAACY0719M2Z9

Since 1986

மத்திய மாநில அரசுகளின் சீட்டு நிதிச் சட்டப்படி பதிவு பெற்ற சீட்டுகள் நடத்தும் நிறுவனம்

தெய்வத்திரு
Dr. Lion.யாளி S.மதிவாணன்
நிறுவனர்

223, எழில் இல்லம், மேட்டூர் ரோடு, ஈரோடு – 638 011.
Ph : 0424 - 2259007, 4020258 94431 28386 / Email : yaleychitfunds@gmail.com

எமது பெருமை மிகு சீட்டு குரூப்புகள்

மாதத் தவணை	மாதங்கள்	சீட்டு தொகை
₹. 2,00,000	25	₹. 50,00,000
₹. 1,00,000	25	₹. 25,00,000
₹. 50,000	25	₹. 12,50,000
₹. 50,000	40	₹. 20,00,000
₹. 25,000	40	₹. 10,00,000
₹. 30,000	40	₹. 12,00,000
₹. 15,000	40	₹. 6,00,000
₹. 20,000	30	₹. 6,00,000
₹. 10,000	30	₹. 3,00,000
₹. 20,000	25	₹. 5,00,000
₹. 10,000	25	₹. 2,50,000
₹. 8,000	25	₹. 2,00,000
₹. 4,000	25	₹. 1,00,000

Jc பிரேம்சரண் மதிவாணன்
நிர்வாக இயக்குநர்
94433 28386

புதிய சீட்டில் இணைய தொடர்புக்கு

94433 28701 | 94432 28731 | 94877 28386

தினசரி, வார மற்றும் மாத கலெக்‌ஷன்கள் உண்டு

கர்நாடக நெசவாளர் கூட்டமைப்பின் சார்பில் தேசிய கைத்தறி தினம்

ஆகஸ்ட் 7–ம் தேதி தேசிய கைத்தறி தினம், கர்நாடக நெசவாளர் கூட்டமைப்பின் சார்பில் விமரிசையாக கொண்டாடப்பட்டது. பெங்களூரு தொகட்ட வீர சத்ரிய பவனில் நடந்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாராயன் அவர்களுக்கும், கர்நாடக செங்குந்தர் சங்கத் தலைவர் R.கந்தசாமி அவர்களுக்கும் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது, கர்நாடக செங்குந்தர் சங்கத்தின், நிர்வாகக் குழுவினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அறிவிப்பு

சங்கம் தொடர்பான செய்தி மற்றும் படங்கள் அனுப்பும்போது செங்குந்தமித்திரன் வளர்ச்சி நிதியையும் அனுப்பிவைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

– பொதுச் செயலாளர்

ஆயுள் உறுப்பினர்
கட்டணம்: ரூ. 100

செங்குந்த மித்திரன்
15 ஆண்டு சந்தா: ரூ. 1000

வங்கி விவரம்:

South Indian Senguntha Mahajana Sangam

SB A/c No	: **020100050304358**
Bank	: **Tamilnadu Mercantile Bank Limited**
Branch	: George Town, Chennai - 600001
IFSC	: **TMBL0000020**

அல்லது

South Indian Senguntha Mahajana Sangam

SB A/c No	: **527402010002485**
Bank	: **Union Bank of India**
Branch	: Armenian Street Branch, Chennai
IFSC	: **UBIN0552747**

அல்லது எந்த வங்கியிலிருந்தும் மேற்கண்ட கணக்கின் பெயருக்கு DD எடுத்தும் அனுப்பலாம்.

பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளை
Pavendar Bharathidasan Arakkattalai

SB A/c No.	: **420141716**
Bank	: **Indian Bank**
Branch	: MGT Branch, Thambu St, Chennai
IFSC	: **IDIB000M002**

செங்குந்தர் மாளிகை

செங்குந்தர் மாளிகை தற்போது சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தங்குவதற்கு ஏற்ற நிலையில் முழு சுகாதார, குடிநீர் வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

வெளியூர்களிலிருந்து வரும் உறவினர் பெருமக்கள் கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணை பயன்படுத்தி முன்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொலைபேசி எண்: 044-25226852

விடுதி கட்டணம்

சிங்கிள் ரூம்	: ரூ. 250/–
டபுள்ஸ் ரூம்	: ரூ. 500/–
டபுள்ஸ் ரூம் ஏ/சி	: ரூ. 750/–

மாத வாடகைக்கும் அறைகள் தங்குவதற்கு விடப்படுகின்றன.

சிங்கிள் ரூம் (பொது)	ரூ. 6,000/–
முன்பணம்	ரூ. 30,000/–
சிங்கிள் ரூம் உறுப்பினர்	ரூ. 5,000/–
முன்பணம்	ரூ. 25,000/–
டபுஸ் ரூம் (பொது)	ரூ. 10,000/–
முன்பணம்	ரூ. 50,000/–
உறுப்பினர்	ரூ. 9,000/–
முன்பணம்	ரூ. 45,000/–

தற்போது இரவு / பகல் முழு நேரமும் பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

- நிர்வாகம்

அறிவிப்பு

செங்குந்த மித்திரன் சந்தாதாரர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள்:

செங்குந்த மித்திரன் இதழ் தொடர்பான சந்தேகங்களுக்கும், புகார்களுக்கும் கீழ்க்கண்ட அலைபேசி எண்: **97911 17261**-க்கு தொடர்பு கொள்ளவும். செங்குந்த மித்திரன் இதழ் கிடைக்கப் பெறாதவர்கள் தங்கள் சந்தா எண், முகவரி மற்றும் அலைபேசி எண்ணுடன் அஞ்சலில் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறந்து போன சந்தாதாரர்களின் விபரங்களை சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் தெரிவிப்பதோடு, குடும்ப உறுப்பினர்கள் எவரேனும் ஒருவர் பெயரில், ஆதார் அடையாள அட்டை எண்–ஐ பயன்படுத்தி புதுப்பித்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

- பொதுச்செயலாளர்,

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

அறிவிப்பு

திருமண தகவல் மையம் ஞாயிற்றுக் கிழமை தவிர அனைத்து நாட்களிலும் செயல்படும்.

ஜாதகப் பதிவுக் கட்டணம் (1 வருடம்) ரூ. 500/–

அலுவலக நேரம்:

தினசரி காலை 10.30 மணி முதல் மாலை 05.00 மணி வரை

- பொதுச்செயலாளர்,

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

செங்குந்த மித்திரன்

RNI No. TNTAM/2000/03982

செங்குந்த மித்திரன் சீரார் இதழ்வாழி
எங்குந்தன் போ்பரப்பும் ஈடில்லாப் - பொங்குந்தன்
கூத்தர் குலம் வாழி! கோலத் தமிழ் வாழி!
ஏத்துநலம் வாழி இசைந்து

- வாரியார் சுவாமிகள்

ஆகஸ்ட் 2021 மலர்: 21 இதழ்: 8

ஆசிரியர்:

K.P.K.செல்வராஜ்

சந்தா விபரம்

தனி இதழ் : ரூ. 15/-

15 ஆண்டு சந்தா : ரூ. 1000/-

1-12-2020 முதல் புதிய விளம்பரக் கட்டண விபரம்

கலர்

நடுப்பக்கம்	:	ரூ. 15,000
முன் உள்அட்டை	:	ரூ. 10,000
பின் அட்டை	:	ரூ. 10,000
பின் உள்அட்டை	:	ரூ. 10,000
முழுப்பக்கம்	:	ரூ. 5,000
அரைப்பக்கம்	:	ரூ. 2,500
கண்ணீர் அஞ்சலி (B&W)		ரூ. 3,500

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

South Indian Senguntha Mahajana Sangam

எண்.58, (ப. எண்.89), அரண்மனைக்காரன் தெரு, சென்னை-600001.

தொலைபேசி : **044 - 25226852**

நிர்வாக அலுவலகம் (கடிதம் & தொடர்புக்கு)

வள்ளல் சபாபதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகம் (பச்சையப்பன் கல்லூரி பின்புறம்), எண்.25, ஆரிங்டன் சாலை, சென்னை–600030.

Phone: 044 - 42957999, 97911 17261

E-mail: sengunthamithiran@gmail.com

http://www.sengunthamithiran.in

செங்குந்த மித்திரன் சந்தாதாரர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

- தங்கள் முகவரியில் தொலைபேசி எண்ணையும், மின் அஞ்சல் முகவரியையும் சேர்க்காத சந்தாதாரர்கள் தற்போது உடனடியாக பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.
- இறந்து போன சந்தாதாரர்களின் விபரங்களை, அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் தலைமைச் சங்கத்திற்கு, (தக்க ஆதாரத்துடன்) உடன் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.
- செங்குந்த மித்திரன் இதழ் கிடைக்கப் பெறாத வாசகர்கள் தங்கள் புகாரை எழுத்து வடிவில் கடிதம் அல்லது E-mail மூலமாக தலைமை சங்கத்திற்கு தெரிவிக்கவும். தொலைபேசியில் தெரிவிப்பதை தவிர்க்குமாறு அருள் கூர்ந்து கேட்டுக் கொள்கிறோம்.
- தங்கள் தொலைபேசி எண்ணையும், மின் அஞ்சல் முகவரியையும் ஏற்கனவே அனுப்பி உள்ள சந்தாதாரர்கள் மீண்டும் அனுப்ப வேண்டாம்.
- இருப்பிட மாற்றம் செய்யும் சந்தாதாரர்கள் உடனுக்குடன் தங்கள் முகவரி மாற்றத்தை அலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். மாதந்தோறும் செங்குந்த மித்திரன் இதழ்கள் திரும்பி வருவதை இதன் மூலம் தடுக்க முடியும்.
- வர்த்தகம் மற்றும் திருமண வரன் விளம்பரங்கள் அளிக்கும் வாடிக்கையாளர்கள் தங்களுக்கு விரைவில் இதழ் கிடைக்க வேண்டும் என்று கருதினால் ரூ.60/– ஐ கொரியர் கட்டணமாக தங்கள் விளம்பர கட்டணத்துடன் சேர்த்து அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.
- சங்க நிகழ்ச்சிகளை செங்குந்த மித்திரன் இதழில் வெளியிட விரும்பும் உறுப்பினர்கள், நிர்வாகிகளின் பரிந்துரையுடன் sengunthamithiran@gmail.com என்ற மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும். வாட்ஸ்அப் மூலம் அனுப்பப்படும் செய்திகள் கண்டிப்பாக செங்குந்த மித்திரன் இதழில் பிரசுரிக்க ஏற்க இயலாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.
- மாவட்ட, கிளைச் சங்க உறுப்பினர்கள் தங்கள் பகுதியில் வர்த்தக, திருமண மற்றும் இல்ல விழாக்கள், நினைவஞ்சலி விளம்பரங்களைப் பெற்று அனுப்புவது செங்குந்த மித்திரன் வளர்ச்சிக்கு பேருதவியாக இருக்கும் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.
- செங்குந்த மித்திரன் இதழ் புதுப்பிக்காத வாசகர்கள் மேலும் காலம் தாழ்த்தாமல் உடன் புதுப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். சந்தா சேர்க்கை மற்றும் பதிவு குறைவாக இருக்கும் இந்த நேரத்தில் இதழ் தங்கு தடையின்றி இப்போதுள்ள பொலிவுடன் தொடர்ந்து வரவேண்டும் என்றால் அதற்கான முயற்சியும், நடவடிக்கையும் வாசகர்கள் கையிலும், நிர்வாகிகள் மனதிலும்தான் உள்ளது என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

தொடர்ந்து தங்கள் நல் ஒத்துழைப்பையும், ஆதரவையும் வேண்டுகிறோம்.

R.P.குமரகுருபரன், பொதுச்செயலாளர்,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அன்பார்ந்த உறவினர்களுக்கு ஓர் வேண்டுகோள்!

செங்குந்த மாளிகை சீரமைக்கும் விதமாக பல வருடங்களாக பழுது பட்டிருந்த மின் தூக்கி(Lift)யை மாற்றவேண்டி உள்ளது. வயது முதிர்ந்த வாடிக்கையாளர்கள் மாடியில் உள்ள அறைகளில் தங்குவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். இதனால் வந்து தங்குபவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவாய் இழப்பு ஏற்படுகிறது.

மேலும் சொத்து வரி, குடிநீர் வரி, கழிவுநீர் அகற்றும் வரி, மின் கட்டணம் ஆகியவை கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளதால் மாளிகையை நிர்வகிப்பதில் பெருத்த சிரமம் ஏற்பட்டுள்ளது.

இது பற்றிய வேண்டுகோளை கடந்த நான்கு, ஐந்து மாதங்களாக செங்குந்த மித்திரன் இதழில் வெளியிட்டு வருகிறோம். ஆயினும் மாளிகை சீரமைப்பு பணிக்கு போதிய நிதி ஆதாரம் வசூலாகவில்லை.

கொரோனா நோய் தொற்று காரணமாக உறுப்பினர்களையும் நிர்வாகிகளையும் நேரில் சந்திக்க இயலவில்லை.

ஆகவே உறுப்பினர்கள், கிளைச் சங்க மாவட்ட சங்க நிர்வாகிகள். இந்த அசாதரணமான நிலைமையை உணர்வு பூர்வமாக உணர்ந்து நிதி வழங்கிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வங்கி விபரம்

Name : South Indian Senguntha Mahajana Sanmgam
Bank : Union Bank of India
Branch : Armenian Street
A/c No : 527402010002485
IFSC : UBIN0552747

இப்படிக்கு,

தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் மற்றும் மண்டல நிர்வாகிகள்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

ஆயுள் உறுப்பினர்,
செங்குந்த மித்திரன் ஆயுள் சந்தா
தகவல் படிவம்

ஆயுள் உறுப்பினர் எண் :

செங்குந்த மித்திரன் சந்தா எண் :

புகைப்படம்

1. பெயர்
2. தந்தை / கணவர் பெயர்
3. வயது பிறந்த தேதி
4. கல்வி 5. இரத்த வகை
6. தொழில்
7. முகவரி

அஞ்சல் எண்

8. மாவட்டம்/மாநிலம்

10. மொபைல் எண்
11. வாக்காளர் அட்டை எண்
12. ஆதார் எண்
13. மின்னஞ்சல் முகவரி

நமது சங்கத்தின் சட்ட திட்டங்களை மதித்து நடப்பேன் எனவும், செங்குந்த சமுதாய வளர்ச்சிப் பணிகளுக்கு என்னால் இயன்றளவு ஒத்துழைப்பேன் எனவும் மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மை எனவும் உறுதியளிக்கிறேன்.

நாள்: கையொப்பம்

அனுப்பவேண்டிய முகவரி:

பொதுச்செயலாளர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்,
எண்.25, ஆரிங்டன் சாலை, வள்ளல் சபாபதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகம்
(பச்சையப்பன் கல்லூரி பின்புறம்), சென்னை-600030

தலைவர் சுற்றுப்பயண விபரம்

செப்டம்பர் 2021

07-09-2021 செவ்வாய் மதியம் 1:00 மணி

காஞ்சிபுரம்:

காஞ்சிபுரம் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் பொருளாளர் திரு. D.தணிகாசலம் செங்குந்தர் மகன் திருமண விழா

07-09-2021 செவ்வாய் மாலை 6:00 மணி

கண்டாச்சிபுரம் - விழுப்புரம்

வீரங்கிபுரம் கிளைச் சங்க நிர்வாகி திரு.S.கண்ணன் செங்குந்தர் மகன் திருமண விழா

08-09-2021 புதன் காலை 11:00 மணி

மதுரை:

திருவாப்புடையார் கோயில் செங்குந்தர் உறவின்முறை திருமண மண்டபம் திறப்பு விழா

08-09-2021 புதன் மாலை 6:00 மணி

புதுச்சேரி:

புதுச்சேரி செங்குந்தர் கல்விச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் வள்ளல் முத்து சில்க்ஸ் திரு.P.நமச்சிவாயம் செங்குந்தர் அவர்களின் மகன் திருமண விழா

08-09-2021 புதன் இரவு 7:00 மணி

புதுச்சேரி:

அகமதாபாத் திரு.G.ஜெயபால் செங்குந்தர் அவர்களின் மகன் திருமண விழா

08-09-2021 புதன் இரவு 8:00 மணி

திட்டக்குடி:

Lπ.ராஜபிரதாபன் செங்குந்தர் அவர்களின் மகன் திருமண விழா

15-09-2021 புதன் காலை 10:00 மணி

திருப்பூர்:

அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

16-09-2021 வியாழன் காலை 9:00 மணி

தாராசுரம்:

ஸ்ரீ வீரபத்திரசுவாமி திருக்கோயில் கால்கோள் விழா மற்றும் அடிக்கல் நாட்டு விழா

21-09-2021 செவ்வாய் காலை 10:00 மணி

திருப்பூர்:

நெசவாளர் நேசன் சிவத்திரு J.சுத்தானந்தன் பிறந்த நாள் விழா

அக்டோபர் 2021

04-10-2021 திங்கள் காலை 9:00 மணி

திருப்பூர்:

கொடிகாத்த தியாகி திருப்பூர் குமரன் பிறந்த நாள் விழா

09-10-2021 சனி காலை 10:00 மணி

திருப்பூர்:

தெ.செ.ம.சங்கத் தலைவர் கைத்தறிக் கதிரவன் K.P.K.செல்வராஜ் அவர்களின் பிறந்த நாள் விழா

நவம்பர் 2021

10-11-2021 புதன் காலை 7:00 மணி

அருப்புக்கோட்டை:

திரு.கருணாநிதி செங்குந்தர் மகன் திருமண விழா

நிகழ்ச்சிகள் அனைத்தும் அரசு வழிகாட்டுதல்படி நடத்தப்படும்.



19.08.2021 வியாழக்கிழமை அன்று ஈரோடு மாவட்டம் சென்னிமலை குமராபுரியில் நடைபெற்ற **திரு. அ.முத்துக்குட்டி (எ) மாரிமுத்து செங்குந்தர் - திருமதி. மா.மஞ்சுளாதேவி** ஆகியோரது மகன்

மா.விக்னேஷ் M.Sc.,- ப.சுவாதி B.E.,

ஆகியோரது திருமண வரவேற்பு விழாவிற்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ் எண்கள்

Numerals	English	Tamil
1	One	ஒன்று
10	Ten	பத்து
100	Hundred	நூறு
1000	Thousand	ஆயிரம்
10000	Ten Thousand	பத்தாயிரம்
100000	Hundred Thousand	நூறாயிரம்
1000000	One Million	பத்து நூறாயிரம்
10000000	Ten Million	கோடி
100000000	Hundred Million	அற்புதம்
1000000000	One Billion	நிகற்புதம்
10000000000	Ten Billion	கும்பம்
100000000000	Hundred Billion	கணம்
1000000000000	One Trillion	கற்பம்
10000000000000	Ten Trillion	நிகற்பம்
100000000000000	Hundred Trillion	பதுமம்
1000000000000000	One Zillion	சங்கம்
10000000000000000	Ten Zillion	வெல்லம்
100000000000000000	Hundred Zillion	அன்னியம்
1000000000000000000	No word	அர்த்தம்
10000000000000000000	No word	பரார்த்தம்
100000000000000000000	No word	பூரியம்
1000000000000000000000	No word	முக்கோடி
10000000000000000000000	No word	மஹாயுகம்

செழுமை நிறைந்த செப்டம்பர் மாதம்!

செப்டம்பர் 15 – அறிஞர் அண்ணா பிறந்த நாள்

செப்டம்பர் 21 – சிவத்திரு J.சுத்தானந்தன் பிறந்த நாள்

செப்டம்பர் 24 – வள்ளல் தி.நா.சபாபதி செங்குந்தர் நினைவு நாள்

செப்டம்பர் மாதமிது செழுமை பெற்றுச்
செகமதிலே தழைப்பதற்குச் சிறப்பு உண்டு,
கப்பிவரும் இருளினையே களையச் செய்து
கதகதக்கும் ஒளியினையே கருத்தில் பாய்ச்சும்,
ஒப்பிலாத தலைவர்கள் உதித்த மாதம்
உணர்வூட்டும் வள்ளலினை நினைக்கும் மாதம்,
செப்புகின்ற இம்மாதச் சிறப்பை யெல்லாம்
சிந்தையிலே வைத்தாலே செம்மைப் பூக்கும்.

திருவாரூர் பிறந்திட்ட தியாக சீலர்
திசைகாட்டும் மரமாகத் தன்னை ஈந்தார்,
உருவான செங்குந்தர் சங்கம் ஓங்க
உழைத்ததாலே ஒப்பற்ற தலைவ ரானார்,
அறியாமை அகல்வதற்கு அரிய தொண்டாய்
அல்லலினைப் போக்குகின்ற கல்வி தந்தார்,
திருவானார் செங்குந்தர் மக்கள் வாழ
திறம்படைத்தார் சபாபதியார் தீரம் வாழ்க!

பேரறிஞர் பெருந்தகையோ பிறந்த தாலே
பெருமையும் சேர்ந்திங்கு பலமும் கூட்டும்,
ஊரறிய உலகறிய உயர்ந்த மேலோன்
உத்தமராய்த் தமிழ்நாட்டின் முதல்வ ரானார்,
பேரெடுத்தார் நம்குலத்தின் பெருமை காத்து
பெருந்துணையாய் இவரிருந்தார் பேச்சில் வென்றார்,
ஆரவாரம் ஏதுமின்றி அன்பால் என்றும்
அகிலத்தை ஈர்த்தவர்நம் அண்ணா வாழ்க!

உத்யோக ரத்னாவாய் உருவம் தாங்கி
உயர்குலமாம் செங்குந்தர் உறவுக் காக,
எத்தனையோ தியாகங்கள் எளிதாய்ச் செய்து
ஏற்றமுற காத்தவரே எங்கள் நேசன்,
சத்தில்லாக் குழந்தைபோல் இருந்த நம்மைச்
சாதிக்கும் அளவுக்குச் சக்தி தந்தார்,
புத்தனைப்போல் போதித்த சுத்தா னந்தன்
புவியினிலே எந்நாளும் புகழாய் வாழ்க!

– **கவிஞர். அ.முத்துசாமி** எம்.ஏ., எம்.எட்.,எம்.பில்.,
தாரமங்கலம்.

வாழ்க மணமக்கள்

20.08.2021 வெள்ளிக்கிழமை அன்று திருவண்ணாமலை மாவட்டம் மும்முனி கிராமத்தில் நடைபெற்ற வடமணப்பாக்கம் **திரு. S.A.வஜ்ஜிரவேலு செங்குந்தர் - திருமதி சாந்தி வஜ்ஜிரவேலு** ஆகியோரது மகள்
V.நிர்மலா B.E., - R.மோகன் B.Tech.,

20.08.2021 வெள்ளிக்கிழமை அன்று திருவள்ளூர் மாவட்டம் பொதட்டூர்பேட்டையில் நடைபெற்ற வாரியார் மேல்நிலைப்பள்ளி இயக்குனர் **திரு. அன்பு வேலாயுதம் செங்குந்தர் - திருமதி சித்ரா வேலாயுதம்** ஆகியோரது மகன்
A.வினோத்குமார் M.C.A.,D.C.M., - R.தேன்மொழி B.E.,

20.08.2021 வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் நடைபெற்ற உட்கோட்டை தமிழாசிரியர் **சி. வீரமணி - அருள்மொழி** இவர்கள் மகன்
வீ. சிவகுமார் B.E., - டாக்டர் பிரியதர்ஷினி

20.08.2021 வெள்ளிக்கிழமை அன்று தென்காசி மாவட்டம் இலஞ்சியில் நடைபெற்ற **திரு. T.M.P.S.மகாலிங்கம் செங்குந்தர் - தெய்வத்திருமதி. பத்மாவதி** ஆகியோரது மகள் **M.பொன்னம்மாள் B.Com., - R.நமச்சிவாயம் B.E.,CA**

27.08.2021 வெள்ளிக்கிழமை அன்று சென்னை குரோம்பேட்டையில் நடைபெற்ற **திரு.E.சுந்தரராஜன் செங்குந்தர் - திருமதி R.சரஸ்வதி** ஆகியோரது மகனும் தெ.செ.ம.சங்கத்தின் மாநில ஆன்மிக அணி துணை அமைப்பாளருமான
S.சுரேஷ்பிரியன் B.E., M.B.A.,- B.மஹாலட்சுமி ACA., Grad CS.,

ஆகியோரது திருமணத்திற்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

செங்குந்தர்களால் நடத்தப்பட்ட திருவிழாக்கள்

20.08.2021 வெள்ளிக்கிழமை அன்று தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டம் தாராசுரத்தில் நடைபெற்ற
அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளியம்மன் உடனுறை அருள்மிகு ஸ்ரீ வீரபத்ரசுவாமி திருக்கோயில் ஸ்ரீ கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் 831வது குரு பூஜை விழா

20.08.2021 வெள்ளிக்கிழமை நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் இராஜக்கவுண்டம்பாளையம் செங்குந்த முதலியார் பாவடி பஞ்சாயத்து
அருள்மிகு விநாயகர், அருள்மிகு முத்துக்குமாரசாமி, அருள்மிகு இடும்பன் சுவாமி, அருள்மிகு நவகிரஹங்கள் அமைந்த திருக்கோயில் மஹா கும்பாபிஷேக விழா

நம்ம வீட்டுக் கல்யாணம்

மணமக்கள்: **D. சுந்தரம் B.E., - S. பூவிழி M.Sc., B.Ed., M.Phil.,**

மண நாள்: 20-08-2021 வெள்ளிக்கிழமை

இடம்: செங்குந்தர் திருமண மஹால் நெசவாளர் நகர், தருமபுரி.

தியாகி **தெய்வத்திரு. K.K.கந்தசாமி முதலியார் - தெய்வத்திருமதி.பாப்பாத்தியம்மாள்** அவர்களின் பேரனும், எங்களது மகனின் திருமண விழாவிற்கு வருகை தந்து வாழ்த்திய தெ.செ.ம.சங்கத்தின் தலைவர் கைத்தறிக் கதிரவன் **திரு.K.P.K.செல்வராஜ்,** தருமபுரி மாவட்ட செ.ம.சங்கத்தின் தலைவர் **திரு.M.K.S.உத்தண்டி,** மாவட்டப் பொதுச்செயலாளர் **திரு.P.சச்சிதானந்தம்,** மாவட்டப் பொருளாளர் **திரு.K.திருநாவுக்கரசு,** நெசவாளர் நகர் கிளைச் செயலாளர் **திரு.P.வாசுதேவன்,** கிளைச் சங்க செயற்குழு உறுப்பினர்கள் **திரு.M.சண்முகசுந்தரம், திரு.B.சம்பந்தம்** மற்றும் செங்குந்த சொந்தங்கள் அனைவருக்கும் நன்றி! நன்றி! நன்றி!

M.சதாசிவம் - உமாராணி
இண்டூர்

K. தினகரன் - விஜயலட்சுமி
TNSTC ஓட்டுநர், அலுவலக செயலாளர் LPF
பொருளாளர், செங்குந்த மகாஜன சங்கம்,
நெசவாளர் நகர் கிளை, தரும்புரி.

செங்குந்தமித்திரன் வளர்ச்சி நிதியாக ரூ.5000 தலைமைச் சங்கத்திற்கு வழங்கியுள்ளார்கள்.

செங்குந்தர் குலச் செம்மல் திரு. இ.எஸ்.தியாகராசன் செங்குந்தர்

செயற்கரிய செயல்களால் பெரியவரான இ.எஸ்.தியாகராசன் அவர்களைச் 'சின்னவர்' என்று அழைப்பது அன்புச் சொல்லாகும். இவருடைய தமையனார் திரு.ஏ.ச.சுப்பிரமணிய முதலியார் அவர்களைப் 'பெரியவர்' என்று சொல்வார்கள். 'சின்னவர்' என்றாலே 'இஎஸ்.டி' என்று பொதட்டூர்ப்பேட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்கள் குறிப்பாகச் செங்குந்தர் வாழிடங்களில் உள்ள சிறியவர் முதல் பெரியவர் வரை அறிந்த செய்தியாகும்.

இளமை வாழ்க்கை

1928ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ஆம் நாள் அன்றைய ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டம், பொதட்டூர்ப்பேட்டையில் புகழ்மிக்க மரியாதைக்குரிய ஏகிரி குடும்பத்தில் திரு. ஏகிரி மு.சஞ்சீவி முதலியாருக்கும், திருமதி. கோவிந்தம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார்.

இளமையில் சுறுசுறுப்பாகவும், பெற்றோரின் அன்புக்குரியவராகவும் வளர்ந்த இவர், தன் தொடக்க கல்வியைத் திண்ணைப் பள்ளியில் பயின்று 6ஆம் வகுப்பைப் பக்கத்து கிராமமாகிய அத்திமாஞ்சேரிப்பேட்டையில் ஹையர் எலிமெண்டரி பள்ளியில் பயின்றார். போக்குவரத்து வசதியின்மையாலும், உடல்நிலை ஏற்றுக் கொள்ளாததாலும், 6ஆம் வகுப்பிலேயே படிப்பை நிறுத்தி விட்டார். இருப்பினும் தன் பட்டறிவாலும் விடா முயற்சியாலும் உயர் கல்வித் தகுதி பெற்றவர்களை விட தமிழ், தெலுங்கு, ஆங்கில மொழிகளில் பேசவும், எழுதவும் ஆற்றலை வளர்த்துக் கொண்டார்.

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்

இவருடைய தந்தையார் திரு. ஏகிரி.சஞ்சீவி முதலியார் இப்பகுதியின் நிலச்சுவான்தார், தர்மகர்த்தா. இவர் அன்றைய சித்தூர் மாவட்ட போர்டு உறுப்பினராகப் பணியாற்றியவர். பொதுவாழ்வைத் தங்கள் வாழ்க்கையின் ஒரு அங்கமாக மதித்து

வந்த குடும்பம் என்பதால் செல்வத்தால், கல்வியால், அன்பால், பண்பால், அறத்தால், நட்பால் சிறந்து விளங்கியது.

எனவே இக்குடும்பம் மக்கள் மனத்தில் இன்றளவும் பதிந்த பல்கலைக்கழகமாக விளங்கி வருகிறது. இவர்களுடைய குடும்பத்தின் நல் ஆலோசகராகவும், நண்பராகவும் இருந்தவர் திரு.எம்.எம். தணிகைமலை அவர்கள்.

எல்லைப் போராட்டம்

நமது பாரத நாடு அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைந்த பொழுது திருத்தணி பகுதிகள் ஆந்திர மாநிலத்துடன் இணைக்கப்பட்டன. திருத்தணிப் பகுதியைச் சார்ந்த மக்கள் அனைவரும் தமிழர்கள். எனவே இப்பகுதியைத் தமிழ்நாட்டோடு இணைக்க வேண்டும் என 'சிலம்புச் செல்வர்' ஐயா ம.பொ.சிவஞானம் அவர்கள் தலைமையில் போராட்டக்குழு அமைக்கப்பட்டது.

தளபதி கே.விநாயகம், தமிழாசிரியர் மங்கலங்கிழார், தணிகை 'கோல்டன்' சுப்பிரமணியம் மற்றும் தமது தமையனார் திரு.ஏ.ச.சுப்பிரமணியம் ஆகியோருடன் இணைந்து 16.08.1947 அன்று திருத்தணி யில் கூட்டம் கூட்டி வடக்கொல்லைப் போராட்டத்திற்கு திரு.தியாகராசன் அவர்கள் வித்திட்டார்.

தணிகை மீட்புப் போட்டத்தில் 'தணிகை தமிழனுக்கே', 'வேங்கடத்தை விடமாட்டோம்', 'தமிழா தூங்காதே' என்று குரல் கொடுத்துப் பல வருடங்கள் வடஎல்லைப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 02.09.1953ஆம் ஆண்டு அன்றைய பாரதப் பிரதமர் திருமதி.நேரு அவர்களை வடவெல்லைப் போராட்டக்குழு சார்பாகச் சந்தித்ததில் பெரும் பங்கு பெற்றவர்.

20.09.1956 அன்று திருத்தணியில் இருந்து தன்னுடைய தலைமையில் நடைப் பயணமாகச் சென்று சென்னைக் கோட்டை அருகே மறியல் செய்ய, அன்றைய கமிஷனரால் விசாரணை செய்யப்பட்டுச் சிறைத் தண்டனை பெற்றார். மேலும் 18.10.1956 அன்று இவர் தலைமையில் வடவெல்லைப் பாதுகாப்புக் குழு சென்னை மத்திய அஞ்சல் நிலையம் முன்பு மறியல் செய்ய, மீண்டும் கைதாகிச் சிறை சென்றார்.

போராட்ட நிதிக்காகத் திருத்தணியில் வீரபாண்டியக் கட்டபொம்மன் நாடகம் ஏற்பாடு செய்தார். அதில் தளபதி கே.விநாயகம் வீரபாண்டியக் கட்டபொம்மனாகவும், திரு.

தியாகராசன் அவர்கள் ஊமைத் துரையாகவும் நடித்தனர். பல போராட்டங்களுக்குப் பிறகு 01.04.1960ஆம் ஆண்டு தணிகை தமிழகத்துடன் இணைந்தது. அன்று முதல் 'தணிகைக் கொண்டான்' என்று அன்புடன் அழைக்கப்பட்ட 'ஐயா' மா.பொ. சி. அவர்களுடனும் 'தளபதி' கே.விநாயகம் அவர்களுடனும் இணைந்து மக்கள் தொண்டாற்றி 'வடவெல்லைத் துணைத் தளபதி' என அழைக்கப்படலானார்.

கல்விப் பணி

அறநெறித் தமிழ்ச் சங்கம் தொடங்கி செவ்வனே தமிழ்த் தொண்டாற்றி வந்த ஆசிரியர் மங்கலங்கிழார் அவர்கள் திரு.தியாகராசன் அவர்களின் மக்கள் செல்வாக்கினை உணர்ந்து இவரைப் பயன்படுத்தி இப்பகுதி வாழ் மக்களுக்குப் பல நன்மைகள் ஏற்பட, வழி வகை செய்தார்.

அம்முறையில் 1952ஆம் ஆண்டு பொதட்டூர்ப் பேட்டையில் உருவானது தான் ஏ.ச.சுப்பிரமணியம் கல்வி அறக்கட்டளை. இதன் மூலம் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தொடங்கப்பட்டுத் தமிழ் வகுப்பும், தெலுங்கு வகுப்பும் பயிற்றுவிக்கப்பட்டு சுமார் 300 மாணவர்கள் ஆசிரியர்களாக உருவாக்கப்பட்டனர்.

மேலும் அதே ஆண்டில், தான் பிறந்த ஊரான பொதட்டூர்ப் பேட்டையில் அரசினர் உயர்நிலைப் பள்ளியை உருவாக்கினார். தன்னுடைய பகுதியில் பல தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளை உருவாக்கினார்.

வகித்த பதவிகள்

தன்னுடைய 19ஆம் வயதிலேயே தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் (கோ–ஆப்டெக்ஸ்) இயக்குநராக பொறுப்பேற்று தொடர்ந்து 17 ஆண்டுகள் அப்பதவியில் திறம்பட பணியாற்றினார். அகில இந்தியக் கைத்தறிச் சங்கத்தில் சுமார் 15 ஆண்டுகள் இயக்குநராகப் பணியாற்றினார். மேலும் ஆந்திர மாநிலக் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநராகவும், ஆந்திர மாநில பருத்தி கூட்டுறவு ஆலைகளின் இயக்குநராகவும் திறம்படப் பணியாற்றினார்.

1970–1878 ஆண்டுகளில் செங்கல்பட்டு மாவட்ட நூலக ஆணைக் குழுவில் (Local Library Authority) தலைவராகவே செவ்வனே

பணியாற்றி திருத்தணி வட்டத்தில் பல நூலகங்கள் அமைய வழிவகுத்தார். நூலாசிரியர்களும் பதிப்பாசிரியர்களும் நலம்பெற உதவிய நல்ல கல்வியாளர்.

பொதட்டூர்ப்பேட்டைப் பேரூராட்சியில் தலைவராக 1956ஆம் ஆண்டு மக்கள் பேராதரவுடன் வெற்றிபெற்று, தொடர்ந்து 25 ஆண்டுகள் மக்கள் தளபதியாகச் சிறப்புறப் பணியாற்றியவர்.

இதற்கிடையே 1962ஆம் ஆண்டு திருத்தணி சட்டமன்றத்திற்குப் போட்டியிட்டுத் வெற்றி வாய்ப்பை இழந்தார். அதே தொகுதியில் 1971ஆம் ஆண்டு போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினர் ஆனார். அவருடைய சட்டமன்ற காலங்களில் பள்ளிப்பட்டு குசஸ்தலை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டவும், சென்னையுடன் நேரடித் தொடர்பு வசதிக்குப் பேருந்துகள், பல ஊர்களை இணைக்கும் விதமாகப் போக்குவரத்து வசதிகள் செய்துள்ளார்.

பல ஊர்களில் பொது சுகாதார மையங்கள் நிறுவி மக்களுக்கு உதவினார். பல கிராமங்களுக்கு குடிநீர் வசதிக்காக மேல்நிலை நீர்த் தொட்டிகளைச் செய்து கொடுத்துள்ளார். அவருடைய பணிக்காலத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய தமிழக வடவெல்லைப் பகுதியாம் திருத்தணிப் பகுதியைச் சார்ந்த ஏழை நெசவாளப் பெருமக்களுக்குத் தொழில் சார்ந்த பல உதவிகளைச் செய்திருக்கின்றார்.

மேலும் கோ–ஆப்டெக்ஸ், அகில இந்தியக் கைத்தறி, நூலகத்துறை மற்றும் கல்வித் துறையில் பலருக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தந்தவர்.

வெளிநாட்டுப் பயணம்

அகில இந்தியக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாக 1984ஆம் ஆண்டு மே மாதம் 15 நாள்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். குறிப்பாக மலேசியா, சிங்கப்பூர், ஆங்காங் நாடுகளுக்குச் சென்று அங்கு வாழும் தமிழர்களைச் சந்தித்து, கைத்தறி தொடர்பான நிலைமைகளை விசாரித்தார்.

இவருக்கு உறுதுணையாக 'மருத்துவ மேதை' டாக்டர் இ.எஸ்.எஸ்.இராமன் உடன் சென்றது சிறப்பு வாய்ந்ததாகும்.

சிறந்த பண்பும் பொதுநோக்கும்

இளமைக் காலத்திலிருந்தே ஆடம்பர வாழ்வை வெறுத்தவர். இயல்பாகவே உள்ள தியாகம் இவருடைய இரத்தத்தில் ஊறிக் கிடந்தது. பகைவனுக்கும் உதவி செய்யும் பரந்த இயல்பு கொண்டவர். பொதுநல நோக்கு கொண்டவர். இந்து, கிறிஸ்து, முஸ்லீம் இன மக்களோடு வேற்றுமை காணாது பழகும் தன்மை கொண்ட இவர் சிறந்த ஆன்மிகர்.

எனவேதான் நடமாடும் தெய்வமாக விளங்கிய வாரியார் சுவாமிகளுடன் நெருங்கிய தொடர்புடையவராக விளங்கினார். முன்னாள் முதல்வர்கள் திரு. கு.காமராஜ், திரு.எம்.பக்தவச்சலம், கலைஞர் மு.கருணாநிதி ஆகியோருடன் நன்னட்புக் கொண்டிருந்தார். தன்னைக் காண வருபவர்களை இன்முகத்துடன் வரவேற்று இன்சொல் வழங்குவதில் வல்லவர்.

இதனால் 'புன்னகை அரசராக'த் திகழ்ந்தார். வடவெல்லைப் போராட்டத் தளபதிகளைப் பாராட்டும் வகையில் 01.11.1981ஆம் நாள், அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் கேடயம் வழங்கிப் பாராட்டினார்கள்.

பொதுவாழ்வில் பொறுப்போடு பணியாற்றிய பெருமகனாரைப் பாராட்டிட அவர் பிறந்த மண்ணான பொதட்டூர்ப்பேட்டையில் 08.05.1994 அன்று 'சிலம்புச் செல்வர்' ம.பொ.சி. தலைமையில் மக்கள் தலைவர் ஜி.கே.மூப்பனார் அவர்கள் பாராட்ட அவருடைய பொதுத் தொண்டின்

பொன் விழா மக்கள் வெள்ளத்தினிடையே கோலாகலமாக நடைபெற்றது.

மக்களின் நல்வாழ்விற்காகத் தன்னைக் காணிக்கையாக்கிக் கொண்டிருந்தாலும், தன் குடும்பத்தின்பால் அளவற்ற பற்றுடையவர். தன்னைப் போன்றே தன் பிள்ளைகளும் பொதுவாழ்விலும், மக்கள் பணியிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பியவர்.

அவருடைய விருப்பத்திற்கேற்ப அவரது மகன்கள் இ.எஸ்.டி.மூர்த்தி, இ.எஸ்.டி.பக்தவச்சலம் ஆகியோர் சிறப்புடன் இருப்பது சாலச் சிறந்தது, மகிழ்ச்சிக்குரியது.

மக்களின் நல்வாழ்விலும், இல்லற வாழ்விலும் நிறைவான மகிழ்ச்சிப் பெற்ற 'எங்கள் சின்னவர்' என்று அழைக்கப்பட்ட, திரு.தியாகராசன் அவர்கள் 02.07.1999ஆம் ஆண்டு அமரரானார். அவர் நினைவும் பெருமையும் மக்கள் நெஞ்சில் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

22.08.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் பூபால்பட்டி செங்குந்தர் பொதுப்பண்டு சார்பில் பூபால்பட்டி செங்குந்தர் இளைஞர்களுக்கான உடற்பயிற்சி கூடம் திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த இனிய விழாவிற்கு பூபால்பட்டி செங்குந்தர் பொதுப்பண்டு தலைவர் S.சுந்தரம் அவர்கள் தலைமை வகித்தார். பொதுப்பண்டு துணைத்தலைவர் பொ.உத்தண்டராமர், செயலாளர் சி.திருப்பதி, பொருளாளர் ஆ.இராமகிருஷ்ணன், நிர்வாகக்கமிட்டி உறுப்பினர்கள் கா.பொ.முருகேசன், சே.செந்தில்குமார், தி.உ.உத்தண்டமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். விருதுநகர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் பொ. சக்திமோகன் கலந்துகொண்டு உடற்பயிற்சி கூடத்தை திறந்து வைத்தார். சிறப்பு அழைப்பாளராக விருதுநகர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் செயலாளர் G.தில்லை கோவிந்தன் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். நிர்வாக குழுவினர் மற்றும் இளைஞர் அணியினர் மகளிர் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

கள்ளக்குறிச்சி மாவட்ட பொதுக்குழுக் கூட்டம்

கள்ளக்குறிச்சி மாவட்டம் தேவபாண்டலத்தில் மாவட்டத் தலைவர் S.M. செந்தில் தலைமையில் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. மாநில செயற்குழு உறுப்பினர்கள் K.வேலு, A.ராஜேந்திரன், கிளை சங்க தலைவர் V.கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் A.R.ஏழுமலை வரவேற்புரையாற்றினார். இந்த கூட்டத்தில் மாவட்ட செங்குந்தர் கல்வி அறக்கட்டளை மற்றும் மேலந்தல் அம்மம்பாளையம் புதிய கிளைச் சங்கம் துவக்கப்பட்டது. K.வேலு தீர்மானம் வாசித்தார். பாண்டலம் லயன்ஸ் கிளப் தலைவர் பாலுசுந்தரம், கச்சராபாளையம் லயன்ஸ் கிளப் தலைவர் மணிகண்டன், பாண்டலம் லயன்ஸ் கிளப் பொருளாளர் ஏழுமலை, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் சின்னசேலம் செந்தில்குமார், அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் சின்னசேலம் பன்னீர்செல்வம் ஆகியோருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் கிளை சங்க நிர்வாகிகள் செங்குந்த சொந்தங்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாவட்ட பொருளாளர் மு.ராமர் நன்றி தெரிவித்தார்.

புதுமனை புகுவிழா வாழ்த்துக்கள்

20.08.2021 வெள்ளிக்கிழமை அன்று திருவள்ளூர் மாவட்டம் அம்மையார்குப்பத்தில் நடைபெற்ற தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் திருவள்ளூர் மாவட்ட தலைமைச் சங்க செயற்குழு உறுப்பினர் **திரு. V.S. வீராசாமி செங்குந்தர் - திருமதி நீலாவதி** ஆகியோரின் புதுமனைப் புகுவிழாவிற்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

SENGUNTHAR ENGINEERING COLLEGE
(AUTONOMOUS)

Estd. 2001

ISO 9001 REGISTERED

Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai

Accredited by NAAC with "A" Grade & Recognized Under Section 2(f) and 12(B) of UGC Act, 1956

TIRUCHENGODE (Po.), NAMAKKAL - 637 205, TAMIL NADU, INDIA.

B.E. CIVIL | CSE* ECE* | EEE* MECH*

*Permanently Affiliated

MBA

Ph.D CSE | ECE

TNEA 2617

M.E. Structural Engg. CSE | VLSI DESIGN

SENGUNTHAR COLLEGE OF ENGINEERING

Estd. 2007

(Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai)

An ISO 2001 : 2015 Certified Institution

TIRUCHENGODE - 637 205, NAMAKKAL (Dt)

B.E. MEDICAL ELECTRONICS ENGG.*

*Permanently Affiliated

ROBOTICS & AUTOMATION

B.Tech. INFORMATION TECHNOLOGY

TNEA 2629

M.E. COMM & NETWORKING, MEDICAL ELECTRONICS

SENGHUNDHAR COLLEGE OF PHARMACY

Estd. 2017

Approved by AICTE, New Delhi & Pharmacy Council of India (PCI)

Affiliated to The Tamil Nadu Dr.M.G.R. Medical University, Chennai

TIRUCHENGODE - 637 205, NAMAKKAL (Dt)

D.PHARM. | **B.PHARM.** Lateral Entry

For Admission Contact

Phone : 04288 - 254716, 255716, 253716, 255727

Cell : 93674 74849, 93600 53352

Log on : www.scteng.co.in | www.scew.org | www.scpt.co.in

அம்பாசமுத்திரம் சங்கம் சார்பில் வேதாத்ரி மகரிஷி பிறந்தநாள் விழா

அம்பாசமுத்திரம் செங்குந்தர் சமுதாய சங்கத்தில் 14.08.2021 அன்று செங்குந்தர் குலச் செம்மல் தத்துவஞானி வேதாத்ரி மகரிஷி அவர்களின் 111வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. மகரிஷியின் வாழ்க்கை அவரது சேவைகள் மற்றும் ஆழியாரில் அமைந்துள்ள அவரது சேவை மையம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. விழாவில் அம்பாசமுத்திரம் செங்குந்தர் சமுதாய சங்கத்தலைவர் K.S.சண்முகசுந்தரம், செயலாளர் G. நடராஜன், பொருளாளர் சங்கரசேகர், துணைதலைவர் A.சங்கரசுப்பிரமணியன், மீனாட்சிநாதன் மற்றும் நிர்வாகிகள் கணபதி அகஸ்தியர் கோவில் நிர்வாக உறுப்பினர் சங்கரன், செயற்குழு உறுப்பினர் கார்த்திகேயன், S.கந்தசாமி, சங்கரநாராயணன் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். மகரிஷியின் திருஉருவபடத்திற்கு மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது.

மழலைகளுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்

ஆகஸ்ட் 24
K.S.நிகிழன்
பெற்றோர் :
M.கார்த்திகேயன் - சுகன்யா,
கொடுமுடி, ஈரோடு.

செப்டம்பர் 28
P.பவனிகாஸ்ரீ
பெற்றோர் :
S.பிரகாஷ் - K. பூவதி
இடுவாய், திருப்பூர்.

75வது சுதந்திர தின விழா - வேதாத்திரி மகரிஷி பிறந்த தின விழா

ஆகஸ்ட் 15, 2021 அன்று நம் நாட்டின் 75வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு மதுரை மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்க அலுவலக வளாகத்தில் மாவட்ட செயலாளர் பா.ரவீந்திரன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். தேசிய கீதம் இசைக்கப்பட்டு வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நம் செங்குந்தர் குல வேதாத்திரி மகரிஷி சுவாமிகளின் பிறந்த நாள் ஆகஸ்ட் 14ஆம் தேதி முன்னிட்டு அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தி தீபாராதனை காட்டி வழிபாடு செய்யப்பட்டது.

இவ்விழாவில் மாவட்ட செயலாளர் பா.ரவீந்திரன், மாநில செயற்குழு உறுப்பினர் N.உதயகுமார், மாவட்ட துணைத் தலைவர் A.ராசுப்பிரமணி, A.ராஜமாணிக்கம், மாவட்ட செயற்குழு உறுப்பினர் M.P.கனகராஜ், S.போஸ், N.சுந்தர், தணிக்கையாளர் A.சுப்பிரமணியன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் P.ராஜ்குமார் மற்றும் திருவாப்புடையார் கோவில் செங்குந்தர் உறவின்முறை செயற்குழு உறுப்பினர் S.செல்லமுத்து புளியங்குடி சிந்தாமணி செங்குந்தர் உறவின்முறை உறுப்பினர் R.ஹரிஹர சுப்பிரமணியன், கோரிப்பாளையம் செங்குந்தர் உறவின்முறை உறுப்பினர் A.வித்யா சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர். அனைவருக்கும் இனிப்பு, தேநீர் விருந்து வழங்கப்பட்டது.

திருநெல்வேலி இடைக்கால் செங்குந்தர் சங்கம் சார்பில் கொரோனா நிவாரணப் பொருட்கள் வழங்கல்

திருநெல்வேலி இடைக்காலில் நெசவாளர்கள், தூய்மைப் பணியாளர்களுக்கு கொரோனா நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி 8–08–2021 அன்று நடைபெற்றது. இடைக்கால் செங்குந்தர் சமுதாயத் தலைவர் விநாயகர் தலைமை வகித்தார். செயலர் அங்குசாமி வரவேற்றார். இடைகால் சித்த மருத்துவமனை மருந்தாளுநர் ஆதம் ஹிலால் முன்னிலை வகித்தார். இடைகால் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் முஹைனுதீன் ஷாஹீர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நிவரணப் பொருட்களை வழங்கினார். செங்குந்த மகாஜன சங்க இடைகால் கிளைத் தலைவர் ராமானந்தம் நன்றி கூறினார். நெசவாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

காலச்சக்கரம்

8 ஓர் எட்டில் வளர்க்காத பிள்ளையும்
16 ஈரெட்டில் கற்காத கல்வியும்
24 மூவெட்டில் முடியாத திருமணமும்
32 நாலெட்டில் பெறாத பிள்ளையும்
40 ஐயெட்டில் சேர்க்காத செல்வமும்
48 ஆறெட்டில் தேடாத புகழும்
56 ஏழெட்டில் சுற்றாத தேசமும்
64 எட்டெட்டில் கிடைக்காத ஓய்வும்

பயனில்லை

பாராட்டுக்கள்

75 வது சுதந்திர தினவிழாவில் **மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக மிகச் சிறந்த சேவை புரிந்தமைக்கான தமிழக அரசு விருது** நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு, ராஜகவுண்டம்பாளையம் கருப்புத் தறிக்காரர் வீடு திரு.முருகேசன் செங்குந்தர் – திருமதி மீனாட்சி ஆகியோரின் மருமகளும், மருத்துவர் திரு. கண்ணன் அவர்களின் மனைவியுமான சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் **திருமதி பத்மபிரியா** அவர்கள் பெற்றமைக்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கோலாஹலம் ஸ்ரீ தேவி ஸம்பத்கரி
kolAhalam sridevi sampatkari

பத்மகோவிந்தன் கைத்தறிக்கூடம்

அசல் காஞ்சிபுரம் கைத்தறி பட்டு ஜரிகை சேலை உற்பத்தியாளர்

ஸ்ரீ ஹரி நிவாஸ்

#338,K.T.S. மணி தெரு, மாமல்லன் நகர், காஞ்சிபுரம்-631502.

ரோடரியன். M.சம்பத்குமார் 80729 08195

PADMAGOVINDAN HANDLOOM HOUSE

Manufacturers of Genuine Kanchipuram Handloom Silk Jari Sarees

Sri Hari Niwas

#338,K.T.S.Mani Street, Mamallan Nagar, Kanchipuram- 631502.

Rtn.M.SAMPATHKUMAR, 80729 08195

மணமகன் தேவை

பெயர் : **Dr.A.R.அபிராமி,**
படிப்பு : Pharm-D, Doctor of Pharmacy
பிறந்த தேதி : 07.07.1997 திங்கள்கிழமை
பிற்பகல் 1.40 மணி

நட்சத்திரம் :
ஆயில்யம் 2ஆம் பாதம்
ராசி : கடகம்
நிறம், உயரம் : சிகப்பு,
162 செ.மீ.,
உடன் பிறந்தோர் : இல்லை
பூர்வீகம் : மருதூர்
தந்தை பெயர் : K.அழகுவேல்
தொழில் : Deputy Transport Commissioner - Driver துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகம், திருச்சி.
தாயார் பெயர் : R.ராஜேஸ்வரி
பணி : அரசு பள்ளி ஆசிரியை, ஜெயங்கொண்டம்.
முகவரி : 36, கல்வி கிராமம், சிதம்பரம் சாலை,
பெரியார்பள்ளி பின்புறம், ஜெயங்கொண்டம் அஞ்சல்,
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம் - 621 802
எதிர்பார்ப்பு : மருத்துவம் மற்றும் உயர்ந்த படிப்பு,
நிரந்தர வேலை வயது 30க்குள்
செல் : **95977 47178**

சனி			சூ
கே	இராசி		சந் பு சு
கு			ரா
		ல	செ

	சூ	செ	கே
	நவாம்சம்		
ல சந்			
சனி ரா	சு		பு கு

1/20660/24-08-21

புதன் திசை இருப்பு 12 வருடம் 3 மாதம் 18 நாள்

பெயர் : **R.கிரிஜா**
பிறந்த தேதி : 20.02.1994 - ஞாயிற்றுக்கிழமை
காலை 9.47 மணி மாசி 8ம் தேதி
படிப்பு : B.E., (EEE),

மேற்படிப்பு : Group - 1
Coaching
நிறம், உயரம், எடை : சிவப்பு,
158 செ.மீ., 55 கிலோ
நட்சத்திரம் : மிருகசீரிஷம்
ராசி, லக்னம் : ரிஷபம்,
மேஷம்
தந்தை பெயர் : திரு.P.ராமலிங்கம் - சிறைத்துறை
தாயார் பெயர் : திருமதி.S.சிவகாமசுந்தரி,
அரசு ஆசிரியர்.
உடன் பிறந்தோர் : அண்ணன் 1
(கோ ஆப்ரேட்டிவ் சீனியர் இன்ஸ்பெக்டர், சென்னை)
தம்பி 1
முகவரி : நெ.6, அப்பர் சாலை,
கேப்பர்மலை ரோடு,
வண்டிப்பாளையம், கடலூர் - 607 004
செல் : **96592 07500, 805660 58912**
சொத்து விபரம் : 2 மாடி வீடு
எதிர்பார்ப்பு : நிரந்தர அரசு வேலை,
இணையான நிரந்தர தனியார் வேலை.
ஒழுக்கம், பணிவு, நல்ல குடும்பம்.

	ல	சந் கே	
சூ சு சனி	இராசி		
செ பு			
	ரா	கு	

	கு		
சு கே	நவாம்சம்		பு
			ல செ ரா
சூ	மா	சனி	சந்

7/20651/12-08-21

மணமகன் தேவை

பெயர் : **C.பூம்பாவை** (மறுமணம்)
படிப்பு : M.Sc., HRD Psychology
பிறந்த தேதி : 25.02.1992, இரவு 10.25 (செவ்வாய்), கும்பகோணம்

நட்சத்திரம் : அனுஷம் 4ஆம் பாதம்
ராசி, லக்னம் : விருச்சிகம், துலாம்
நிறம், உயரம் : சிவப்பு, 161 செ.மீ. (5 அடி 4 அங்குலம்)
தந்தை பெயர் : K.சிதம்பரம், மூத்த கணக்கு அதிகாரி (ஓய்வு), சென்னை குடிநீர்
தாயார் பெயர் : S.அம்புஜம், அரசு ஆசிரியை (ஓய்வு)
உடன் பிறந்தோர் : அண்ணன் 1 C.திருமலர், தலைமை தொழிலாளர் நல ஆய்வாளர், தென்னக ரெயில்வே
முகவரி : 48/1A, 8வது பிரதான சாலை, திருவள்ளுவர் நகர், கொடுங்கையூர், சென்னை - 118
செல் : K.சிதம்பரம் - **95001 15070,**
S.அம்புஜம் - **96000 71740**
சொத்து விபரம்: மணமகளின் பெயரில் மாதம் ரூ.30,000 வாடகை வரக்கூடிய வீடு சென்னையில் உள்ளது.
எதிர்பார்ப்பு : கல்வித்தகுதி: Any Degree,
உயரம் : 165 செ.மீ.,& above,
பணி : அரசு/தனியார்
(சென்னையில் பணிபுரிபவர் மட்டும்)

			கே
சூ பு	இராசி		
சு செ சனி			கு
ரா	சந்	ல	

	செ சனி	ல சு	பு
	நவாம்சம்		ரா
சூ கே			
	சந்		கு

15/20531/

சனி திசை இருப்பு 2 வருடம் 9 மாதம் 15 நாள்

பெயர் : **அ.நிவேதா**
படிப்பு : B.Com., MBA.,
பிறந்த தேதி : 28.01.1995 சனிக்கிழமை மாலை 5.15 மணி, ஸ்ரீபவ வருடம் தை மாதம் 14ம் தேதி

நட்சத்திரம் : மூலம் 4ம் பாதம்
ராசி, லக்னம் : தனுசு, கடகம்
நிறம், உயரம் : மாநிறம், 152 செ.மீ.,
பணி : STANDARD CHARTERED BANK - CHENNAI
வருமானம் : 35,000/-மாதம்
தந்தை பெயர் : K.அன்பழகன், Rtd.Hinduja Foundaries
தாயார் பெயர் : R.செல்வி, கண்காணிப்பாளர், சென்னை மாநகராட்சி
உடன் பிறந்தோர் : சகோதரி திருமணமானவர்
P.ராஜ் மோகன், B.Sc., M.C.A., CTS (USA)
R.நர்மதா, B.E., M.B.A., (House Wife)
முகவரி : 6/4A தனபால் செட்டி 3வது தெரு, கொரட்டூர், சென்னை - 80
பூர்வீகம் : சங்கமங்கலம், நாகப்பட்டினம் மாவட்டம்
செல் : **97101 06379, 97108 44564**
எதிர்பார்ப்பு : நல்ல குடும்ப பின்னணியில் உள்ள படித்த நல்ல பணியில் உள்ள வரன்.
மின்னஞ்சல் : nive28.anbu@gmail.com

	கே		
சனி	இராசி		ல
பு(வ) சூ			செ(வ)
சந்	கு சு	ரா	

சனி சு		சூ செ(வ)	
ரா	நவாம்சம்		ல சந்
			கே
	கு		பு(வ)

20645/05-08-21

கேது திசை இருப்பு 1 வருடம் 0 மாதம் 8 நாள்

மணமகன் தேவை

Name	: **KV.SUSHMA PRIYADHARSSINI**
Qualification	: B.Tech.,(CSE) Amrita-Coimbatore
Date of Birth	: 26.05.1995, 12.51 PM., Neyveli
Nakshatram	: Aswini
Rasi/ Lagnam	: Mesam Simmam
Colour, Height, Weight	: Wheatish brown, 158 Cm, 57 Kg
Caste	: Sengunthar
Job	: Application developer, Oracle, Bangalore
Income	: 1,30,000/- PM
Fathers Name	: Velmurugan.P. M.I.E., MBA., Asst.Chief Manager, NLC Ltd, Neyveli
Native	: Neyveli
Mothers Name	: Kalaiarasi.S. M.Phil., (Maths), Home Maker
Sibling Details	: 1 Younger Sister (M.B.B.S., Govt Vellore Medical College) - Studying
Cell	: **94889 95992, 94429 28127**
Address	: 9A, Type 2 Quarters, Block 6, Neyveli - 607 803

	சந் கே சு	சூ பு	
சனி	இராசி		
			ல / செ
	கு	ரா	

பு	சூ சனி	செ சந்	கே
	நவாம்சம்		
கு ரா			ல / சு

1

கேது இருப்பு 03.10.22.09

வாரியார் அருளமுதம்

★ உலகில் செய்த தர்மம் ஒன்றே என்றென்றும் அழிவில்லாமல் இருக்கும். பொன், பொருள் போன்ற செல்வம் நம் கண் முன்னே காணாமல் போய்விடும்.

★ துன்பம் இல்லாமல் இன்பமாக வாழ விரும்பினால், மனதால் கூட அடுத்தவருக்கு தீங்கு நினைக்கக் கூடாது.

★ வயலில் தூவப்படும் சில விதைகளே, பல ஆயிரம் மடங்கு பயிர்களை திருப்பித் தருகின்றன. அதேபோல, ஒருவர் செய்யும் நன்மையும் தீமையும் அவர்கள் செய்ததற்கு ஏற்ற வகையில், பல மடங்காகப் பெருகி, அவரிடமே திரும்ப வந்துசேரும்.

★ நல்ல உணவுகளை உண்பதால் உடல் வளரும். நல்ல நூல்களைப் படிப்பதால் உணர்வு வளரும். நல்ல உள்ளத்துடன் சதா இறைவனை நினைப்பதனால் உயிர் வளரும். இம்மூன்றும் வாழ்வின் அத்தியாவசியத் தேவைகள்.

★ எப்போதும் இறைவனின் நினைவு வேண்டும். அது முடியவில்லையானால் எழுகின்ற போது, சாப்பிடும் போது மற்றும் படுக்கும் போதாவது நினைக்க வேண்டும்.

செய்யாறு குறிஞ்சி குகன் மேட்ரிமோனி

(செய்யாறு வட்டச் செங்குந்தர் நலவாழ்வு சங்கத்தால் இயக்கப்படுகிறது)

(செங்குந்தர் திருமண தகவல் மையம்)

குறிஞ்சி குகன் நிலையம்

15/2, கோபால் தெரு, கிருபானந்தவாரியார் நகர்,
ரேணு மஹால் அருகில், செய்யாறு – 604 407. தி.மலை மாவட்டம்.
மேலும் தொடர்புக்கு: **04182 - 222784, 89739 32751, 94871 07254**

www.cheyyarkurinjikuganmatrimony.com

E-mail : sengunthars manamaalai@gmail.com

அன்புள்ள சொந்தங்களே,

தங்கள் வீட்டில் திருமணத்திற்குக் காத்திருக்கும் வரனின் முழு ஜாதக விபரத்துடன் (Bio Data) + புகைப்படத்தை (Post Card Size) இணைத்து நேரில் (அல்லது) ஆன்லைனில் (Online) பதிவு செய்யுங்கள். பொருத்தமான வரன் உள்ளது. வரனின் திருமணம் முடியும் வரை பதிவு நீடிக்கும்.

திருமணம் நடந்து முடிந்த உடன் நீக்க தகவல் தெரிவிக்கவும்.

சேவைக் கட்டணம்: ரூ. 1000/- மட்டுமே!

CHEYYAR TALUK SENGUNTHAR WELFARE SOCIETY payable - CHEYYAR
என்ற பெயருக்கு DD (or) Postal Money Order (or) Indian Overseas Bank (IOB), Cheyyar Branch, A/c No. 189101000007819 IFSC CODE: IOBA0001891 NEFT/IMPS Banking ஏதாவது ஒன்றிற்கு சேவை கட்டணம் அனுப்பலாம்.

வரன் பார்க்க வாங்க:
பகல் 10:00 - 1:00 மாலை 4:00 - 7:00 மணி வரை
விடுமுறை: பிரதி சனிக்கிழமை மற்றும் நமது பண்டிகை நாட்கள்.

மதுரை மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்க செயற்குழுக் கூட்டம்

மதுரை மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்க செயற்குழுக் கூட்டம் செங்குந்தர் மாளிகை MC பொன்னுச்சாமி – சந்தானலெட்சுமி வளாகத்தில் 29.08.2021 ஞாயிற்றுகிழமை காலை 11 மணியளவில் மாவட்ட தலைவர் R.காந்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் காந்தி தலைமை ஏற்று பேசினார், செயலாளர் ரவீந்திரன் வரவேற்புரை ஆற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் டாக்டர்.முத்துவேல் செங்குந்தர் உறுதிமொழி வாசித்தார்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத் தலைவர் K.P.K. செல்வராஜ் அவர்களால் நியமனம் செய்த மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

மாநில செய்தி தொடர்பு அமைப்பாளராக S.ரத்தனசபாபதி அவர்களையும், மருத்துவ அணி துணை அமைப்பாளராகDr.P.V.திருமலை முருகன் அவர்களையும், இளைஞரணி துணை அமைப்பாளராகP.ராஜ்குமார் அவர்களையும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க பொருளாரும் மதுரை மாவட்ட தலைவருமானஇரா.காந்தி அவர்கள் பொன்னாடை போர்த்தி வாழ்த்தி வரவேற்றார்கள்.

செயற்குழு உறுப்பினர்கள் பெரும்பாலானோர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். மதுரை தொண்டு மன்ற மண்டல செயலாளராக ஏக மனதாக தேர்வு செய்யப்பட்ட திண்டுக்கல் மாவட்ட தலைவர்V.தண்டபாணி அவர்களை மதுரை மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்கம் சார்பில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

கூட்டத்தில் பல்வேறு பொருள்கள் குறித்து பேசி தீர்மானிக்கப்பட்டது. நிறைவாக மாவட்ட பொருளாளர் திரு.P.திருநாவுக்கரசு நன்றி உரையுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது. இந்த செயற்குழுக் கூட்டத்திற்கான மதிய அசைவ உணவினை மாவட்ட தலைவர் திரு.R.காந்தி அவர்கள் தனது சொந்த செலவில் ஏற்பாடு செய்து வழங்கினார்.

தாராசுரத்தில் ஸ்ரீ கவிசக்கரவத்தி ஒட்டக்கூத்தர் குருபூஜை

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் தாராசுரம் ஸ்ரீபத்ரகாளியம்மன் உடனுறை ஸ்ரீ வீரபத்திரர் ஆலயத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கவிசக்கரவத்தி ஒட்டக்கூத்தர் ஜீவசமாதி குருபூஜை 20.08.2021 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றது. இவ்விழாவில் தஞ்சை மாவட்ட தலைவர் லயன் S.சிவா அவர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டார். மற்றும் திருச்செங்கோடு பாவடி பஞ்சாயத்தார் குருமூர்த்தியும் மற்றும் பஞ்சாயத்தார்களும் பாண்டிச்சேரி செயலாளர் இராஜாகண்ணு அவர்கள், குடும்பத்தோடும், தஞ்சை மாவட்ட அனைத்து கிளைச்சங்க பொறுப்பாளர்களும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

தாராசுரம் வீரபத்திரர் ஆலய கண்காணிப்பாளரும், ஆலய அர்ச்சகரும், தென்னிந்திய செங்குந்த மாகாஜன சங்க ஒட்டகூத்தர் ஆராதனை விழா செயலாளரும் ஆகிய ஜீவானந்தம் அவர்கள் சுமார் 1 மணி அளவில் ஒட்டக்கூத்தர் ஜீவசமாதிக்கு அபிஷேகமும் ஆராதனையும் சுமார் 1.30 மணிக்கு சிவனடியார்களுக்கு மகேஸ்வர பூஜையும் மிக சிறப்பாக செய்து முடித்தார்.

குருபூஜை விழாகுழு பொறுப்பாளர்கள் S சோலைமுத்து, D இராஜந்திரன், M.முத்தையன், V.சுவாமிநாதன், P.ரமேஷ்குமார் மற்றும் உறுப்பினர்கள் விழாவை சிறப்பாக எற்பாடு செய்து கொடுத்தார்கள்.

விழாவில் கலந்து கொண்ட சுமார் 150 பேர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. விழா இனிதே நிறைவுற்றது.

அண்ணா வசியம்

பல்லவப் பேரரசுகளின் தலைநகரம்,
பண்டைய தமிழர்களின் சிலைநகரம்,
அன்று தரணி புகழ் கொண்டது
அதியமான் அஞ்சி,
இன்று தரணி புகழ் கொண்டது
அண்ணா'வின் காஞ்சி...

1909 செப்டம்பர் 15ஆம் தேதி திரு.நடராசன் – பங்காரு அம்மாள் தம்பதியினருக்கு மகனாய் பிறந்தார். இன்றைக்கு சினிமா படங்களோடு மட்டும் பயணிக்கும் இந்த தலைமுறைக்கு அண்ணா'வை எப்படி அறிமுகம் செய்வது இப்படித்தான் செய்ய வேண்டும் என்று நினைக்கின்றேன்

இந்தி எதிர்ப்பின் "துப்பாக்கி" இவர்
இந்திய மக்களின் "விசுவாசம்" இவர்
கரகரத்த குரல்கொண்ட "கபாலி" இவர்
காஞ்சி எடுத்த "விசுவரூபம்" இவர்
சூரரைப்போற்றிய அந்தக்கால "பாகுபலி" இவர்...

தொலைக்காட்சிகளில் தொலைந்து போகும் பிள்ளைகளிடம் சொல்லுங்கள் நம் தொன்மை தொலையாமல் நிலைப்பதற்கு காரணம் அண்ணா என்று, பதவி விரும்பும் தலைவர்களிடையே பதவியே விரும்பிய பண்புடைத் தலைவன் நம் அண்ணா அவர்கள்.ஒரு மனிதன் அறிஞராய் உருமாறுவதும் ஒரு அறிஞன் பேரறிஞராய் உயர்வாவதும் வரலாற்றில் சில இடங்களிலேயே நடக்ககூடியவை அப்படி நடந்தேறியது தான் அண்ணா அவர்களின் வரலாறு.

உலக நாடுகளிடம் உங்கள் நாட்டின் சிறந்த பேச்சாளர்களை முன்னிறுத்துங்கள் என்றால் கிரேக்க நாடு – டொமெஸ்தெனி"யை யும், இங்கிலாந்து – எட்மண்ட் பர்க்"யையும், அமெரிக்கா – இராபர்ட் கிரீன் இங்கர்சால்"லையும் முன்னிறுத்த இந்தியா – பேரறிஞர் அண்ணா"வின் பெயர் எழுதும், ஆம் இவர் வரலாறு தனிமனித வரலாறு அல்ல, தமிழினத்தின் வரலாறு என்ற உண்மையை நாம் அனைவரும் உணரவேண்டும்.

ஒரு மனிதன் கொண்ட கொள்கை மாறாத கொற்றவராய், தன்னைப் பழித்தாலும் இன்சொல்லே பேசிய உற்றவராய்,எல்லாவற்றிலும் பெருமை சேர்த்தவராய் தன் எல்லா நிலைகளிலும் பொறுமை காத்தவராய் வலம் வந்து இம்மண்ணின் வளம் சேர்த்திட்ட நல் மனிதராய் வாழ்ந்திட அவர் எத்தனை தடைகளை கடந்து வந்திருப்பார்.

எப்படியண்ணா இப்படி பொறுமை? எனக்கேட்டபோது "ஒரு புடவையின் ஊடாக நூற்றுக்கணக்கான நூலிழைகள் ஓடும் அடிக்கடி அறுந்துபோகும் பொறுமை இழந்தால் அறுந்த நூலை இணைக்க முடியுமா? ஒரு சேலையை நெய்து முடிக்க முடியுமா? என்று சொன்னார் அண்ணா. அண்ணாவின் பொறுமைக்கு காரணம் நம் செங்குந்தரின் குலத்தொழில் நெசவு, ஆம் அது பெருமைக்குரியது மட்டும் அல்ல பொறுமைக்குரியதும் ஆகும்."

இந்தப் பேரண்டத்தின் எல்லா இடங்களுக்கும் ஒருசேர வெளிச்சம் தந்திட அந்த சூரியனால் கூட முடியாது, இது இந்தப் பேரண்ட விதி,

கவிஞர் தமிழன் ராகுல்காந்தி

ஆனால் தன்னை இகழ்பவர்களுக்குகூட இன்சொல்லே வழங்கிய ஒரு தலைவர்தான் அண்ணா என்கிற அந்த மூன்றெழுத்து நாயகன்.

உலக வரலாற்றில் தம் அரசியல் இயக்கத்தை ஒரு குடும்ப உறவாக வளர்த்த பெருமைக்குரிய தலைவர் அவர். தலைவர்– தொண்டர் என்ற நிலையை மாற்றி அண்ணன்– தம்பி என்ற உறவுநிலையை நிலைநாட்டிய அரசியல் அறிஞர், அண்ணா அவர்கள். "தம்பி நான் உனக்குத் தலைவனில்லை, உனக்கு அண்ணன். உன் குடும்பத்தின் மூத்த மகன். ஒரு தாய் நம்மைச் சுமக்க முடியாத காரணத்தால் தனித்தனியாகப் பிறந்திருக்கிறோம்."என்று சொன்னவர்.

இவரின் தம்பிகளும் இவர் மீது கொண்ட அன்பின் வெளிப்பாடுகள் பல அவற்றில் ஒரு நிகழ்வு

"1962ஆம் ஆண்டு மாநிலங்களவை உறுப்பினராகிறார் அண்ணா, அவரின் உடை பற்றி ஏளனமாக பேசுகின்றனர் எதிர் தரப்பினர். அதனால் மனம் நொந்த மதுரை அ.குருசாமி மற்றும் க.மீனாட்சி என்ற இரண்டு தொண்டர்களும் மதுரையின் அப்போதைய பெரிய துணி தையலகமான மார்டன் டெயிலர்ஸ் சென்று அண்ணா'விற்காக கோட் சூட் தைக்க ஏற்பாடு செய்தார்.

பின்னர் திருச்சியில் பொதுக்கூட்டத்திற்கு வந்திருந்த அண்ணாவைப் பார்த்து அளவெடுக்க டெயிலரோடு திருச்சி வந்து அண்ணாவிற்கு அளவு எடுத்தனர். அப்போது நேரம் இரவு 2 மணி, சில வாரங்களுக்குபிறகு மதுரையில் நடைபெறும் கூட்டத்திற்கு வருகை தந்த அண்ணாவிற்கு அந்த கோட் சூட்டை அணிவித்து மகிழ்கின்றனர் இருவரும். அப்போது அந்த உடைக்கான காலணி அண்ணாவிடம் இல்லை என்று அறிந்த இருவரும், அடுத்த நாள் கொடைக்கானல் கூட்டத்திற்காக சென்றிருந்த அண்ணாவை காலணி வாங்கிகொண்டுபோய் அணிவித்து மகிழ்ந்தனர்.

இவர்கள் தைத்த கோட் சூட் விலை ரூபாய் 200, இதில் என்ன விந்தையென்றால் அவர்கள் இருவரும் அன்றைய மதுரை மாநகராட்சியின் கடைநிலை ஊழியர்கள். அதிலும் தன் மனைவி பாப்பம்மாள் குருசாமியின் நகையை அடகு வைத்து ரூபாய் 100 தேற்றினாராம் குருசாமி.

நான் அறிந்த வகையில் உலகின் விலையுயர்ந்த உடைகளின் வரிசையில் இதுவும் ஒன்று என்றுதான் சொல்லவேண்டும்.

தன் தலைவரின் அவமானம் தனக்கானது என எண்ணிய தொண்டர்களும்,தொண்டனின் ஆசைகள் தனக்கானது என எண்ணிய தலைவரும் வாழ்ந்த பூமி இது.

"தமிழகம் அண்ணா வசியம்.....
தமிழகத்திற்கு அண்ணா அவசியம்...."

உங்கள் பக்கம்

அன்பும், பண்பும், ஆன்மீகமும், வீரமும், விவேகமும் நிறைந்த செங்குந்த சொந்தங்களுக்கு, வணக்கம்.

கொரோனா முதல் மற்றும் இரண்டாம் அலையை நாம் போராடி கடந்திருக்கிறோம். மூன்றாம் அலை கண்டிப்பாக வந்தே தீரும். அதுவும் நமது குழந்தைகளைத் தாக்கும் என வல்லுநர்கள் சொல்வதை நம்புவதா? நம்பாமல் இருப்பதா? என்று தெரியவில்லை. இருப்பினும் நாம் நமது குழந்தைகளோடு பாதுகாப்பான வழிமுறைகளைப் பின்பற்றி இருப்பதே நமக்கு சிறந்த தீர்வாகும்.

“இதுவும் கடந்து போகும்” என்ற தத்துவத்தை எளிமையாக வார்த்தையில் சொல்லி விடலாம்.. ஆனால், வாழ்க்கையில் சில நிமிடங்களைக் கடப்பது அவ்வளவு சுலபம் அல்ல! நம்பிக்கையோடு இருப்போம்! எதனையும் வெல்வோம்!!

இந்தியத் திருநாட்டின் 75வது சுதந்திர தினத்தைப் பார்த்து விட்டோம். நம் நாட்டைப் போல கருத்து சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம், தனிநபர் சுதந்திரம், சிறுபான்மையினர் நலம் வேறு எந்த நாட்டிலும் கிடையாது என்பதை உறுதியாகச் சொல்லலாம்.

தற்பொழுது ஆப்கானிஸ்தான் நாட்டைப் பார்க்கையில், சொந்த நாட்டு மக்களே அகதிகளாக வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். என்ன

என்ன கொடுமைகள், அடக்குமுறை, அராஜகம் போன்றவைகளை நாம் கண்கூடாகப் பார்த்து, கண்கலங்குகிறோம்.

ஆனால், நமது நாட்டில் கருத்து சுதந்திரம் என்ற பெயரில் ஆள் ஆளுக்கு தான் நினைத்ததை எல்லாம், சரியா? தவறா? என்றுகூட யோசிக்காமல் பேசியும், செயல்பட்டும் நாட்டை அதகளப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தவறு செய்ய வாய்ப்புக் கிடைத்தவன் கெட்டவன்
வாய்ப்புக் கிடைக்காதவன் நல்லவன்
நல்லவன் முகமூடிக்குள் கெட்டவனாக இருப்பதைவிட
கெட்டவன் என்ற பெயரோடு நல்லவனாக வாழ்ந்துவிடலாம்!

உள்ளாட்சித் தேர்தல் அறிவிக்கப்படும் சூழ்நிலை உள்ளதால், செங்குந்தர்கள் செல்வாக்காக உள்ள பகுதிகளில் ஒன்றிணைந்து நமது செங்குந்த வேட்பாளரை போட்டியிடச் செய்து வெற்றிபெற வைப்போம்.

மீண்டும் சந்திப்போம்
பிரியமுடன்...

அருள்மிகு ஸ்ரீ சந்தனமாரியம்மன் திருக்கோவில்

சின்னநாயக்கன்பட்டியை பூர்வீகமாகக் கொண்ட
செங்குந்த முதலியார்களுக்கு பாத்தியப்பட்ட திருக்கோயில்

ப.எண்: 120 / பு.எண்:334/83, சின்னநாயக்கன்பட்டி – 628 904.
விளாத்திகுளம் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.

வணக்கம்.

நாங்கள் விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை வெள்ளக்கோட்டை பகுதியில் வாழும் செங்குந்த முதலியார் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் சார்பாக நாங்கள் எழுதிக் கொள்வது. செங்குந்த முதலியார் சமூகத்திற்கு பாத்தியப்பட்ட **ஸ்ரீ சந்தனமாரியம்மன் திருக்கோவில் மற்றும் சுடலை மாடசாமி கோவில்** தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் தாலுகா சின்னவநாயக்கன்பட்டியில் 1932ல் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. மேற்படி 1942ஆம் வருடத்தில் கிராமத்தில் நம் செங்குந்தர் குலத்து மக்கள் பிழைப்பைத் தேடி வெவ்வேறு ஊர்களுக்குச் சென்று விட்டதால் கோவில் பராமரிப்பு இன்றி சிதைந்தும் மற்றும் மின் இணைப்பு இல்லாமலும் உள்ளது. இளைய தலைமுறை மக்களாகிய நாங்கள் ஷை திருக்கோவிலை புதுப்பித்து நம் குடும்பம் மற்றும் சின்னவநாயக்கன்பட்டியில் வசிக்கும் மக்கள் அனைவரது வாழ்க்கை சிறக்கும் எண்ணத்தில் அதனை பராமரிப்பு செய்ய முயற்சி எடுத்துள்ளோம். தற்சமயம் கோவில் திருப்பணி வேலைகள் நன்கொடை பெறப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. கோவில் கும்பாபிஷேகம் செய்து புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள உத்தேசமாக ரூ.10 லட்சம் வரை செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நம் இன மக்களின் பெரும் ஆதரவுடன் புனர் அமைப்புப்பணி நடைபெறுகிறது. தாங்கள் ஸ்ரீ சந்தனமாரியம்மன் திருக்கோவில் மற்றும் சுடலை மாடசாமி கோவில் புனரமைப்பு பணிக்கு பெருந்தகையுடன் தங்களால் இயன்ற அளவிற்கு நன்கொடை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். தாங்கள் மற்றவர்களுக்கு உதவும் தன்மை கொண்ட பெருந்தகை ஆகவே தாங்கள் வழங்கும் நன்கொடை நேரடியாக கோவில் பெயருக்கு சென்று சேரும் வண்ணம் கீழ்க்கண்ட வங்கிக் கணக்கிற்கு தங்களது நன்கொடையை அனுப்பி வைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தலைவர் : ஆ.ராமசாமி கைபேசி: 99523 16622
பொருளாளர் : சோ.லட்சுமணன் கைபேசி: 87788 33807

ACCOUNT NO. : 294812010000155
ACCOUNT NAME : SRI SANDHANAMARIAMMAN THIRUKOVIL
IFSC CODE : UBIN0829480
Bank Name : UNION BANK OF INDIA PLACE : ARUPPUKOTTAI

அம்பிகையை சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்

திருமதி.அன்னக்கொடி காந்தி, மதுரை

பாடல்-22

கொடியே, இளவஞ்சிக் கொம்பே, எனக்கு வம்பே பழுத்த
படியே, மறையின் பரிமளமே, பனிமால் இமயப்
பிடியே, பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்து இங்கு இனிப் பிறவாமல் வந்தாண்டு கொள்ளே..

கொடி போன்ற மென்மையானவளே, கன்யாகுமரியாக மரத்தின் பூங்கொம்பு போன்ற மென்மையான பெண்ணே, அடியேனுக்கு பக்குவமற்ற நிலையிலும் (வம்பிலே பழுத்த கனிபோல) கிடைத்த எழில் உருவமே, என்றும் நிலைத்த வேதங்களின் தெய்வீக வாசமானவளே, இமயமலை அரசன் பர்வதராஜன் குமரியாக அவதரித்தவளே, பெண் யானைக்கு நிகரானவளே, பிரமன் உள்ளிட்ட தேவர்களுக்கு எல்லாம் அன்னையே அபிராமியே! அடியேன் இறந்து (பிறவிப் பிணி நீங்கி) மீண்டும் இந்தப் பூவுலகில் பிறவாமல் இருக்க நீ எழுந்து வந்து அருள்புரிவாயாக!

பலன்: பிறவா வரம் கிட்டும்.

கொம்பு: பூங்கொம்பு. மறை : வேதம், பரிமளம் : நறுமணம், பிடி: பெண் யானை.

பாடல்-23

கொள்ளேன் மனதில்நின் கோலம் அல்லாத அன்பர் கூட்டந் தன்னை
விள்ளேன் பரசமயம் விரும்பேன், வியன் மூவுலகுக்கு
உள்ளே அனைத்தினுக்கும் புறம்பே, உள்ளத்தே விளைந்த
கள்ளே களிக்கும் களியே அளிய என் கண்மணியே.

அபிராமியே! அடியேன் உன்னுடைய திவ்ய மங்கள ஸ்வரூபம் அல்லாமல் வேறு உருவத்தை என்னுடைய மனதில் ஏற்றுக் கொள்ளமாட்டேன். உன்னுடைய பக்தர்கள், உன்னையே தியானிக்கும் உன் அடியவர்கள் இருக்கும் ஸத்சங்கத்தை விட்டு அணு அளவும் பிரிந்திருக்க மாட்டேன். உன்னைக் காட்டாத வேறு சமயங்களை பின்பற்ற மாட்டேன். விரிந்து அகன்று உள்ள விண்ணுலகு, மண்ணுலகு, பாதாளம் மற்றும் அதனுள் ஊடுறுவி நிற்கும் அனைத்து ப்ரபஞ்சங்களும், அவற்றுக்கு அப்பால் வேறாகவும், என் இதயத்தில் உன் தியானத்தால் ஊறிடும் தேனாகவும் (ஆனந்தமாகவும்), அத் தேன் தரும் இனிமையாகவும், என் கண்ணின் மணியாகவும் அபிராமி நிறைந்துள்ளாள்..

பலன்: அன்னையின் பூரண அருள்.

வியன் - விரிந்து அகன்ற, புறம்பே - வெளி,
விள்ளேன் - ஒருபோதும் விட மாட்டேன், கள் - தேன், களி - ஆனந்தம்.

- தொடரும்

வள்ளல் சபாபதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 75வது சுதந்திர தின விழா கொண்டாட்டங்கள்

வள்ளல் சபாபதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் இந்திய சுதந்திர தினத்தின் 75வது ஆண்டு விழா கூட்டம் பள்ளியின் செயலாளர் R.P.குமரகுருபரன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது

பள்ளியின் முதல்வர் M.பாலசுப்ரமணியன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தேசிய கொடியை ஏற்றி வைத்து தென்னிந்திய செங்குந்தர் மகாஜன சங்க பொருளாளர் R.காந்தி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

முன்னதாக தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் கொடி வணக்கப் பாடல்களை மாணவிகள் இசைத்தனர். பள்ளியின் ஆசிரியர்கள் கௌசிக் ஆனந்த் மற்றும் திருமதி.பார்வதி ஆகியோர் சுதந்திர தின வரலாற்று நிகழ்வுகளையும் விடுதலைப் போரில் பெரும் பங்காற்றிய கவிஞரின் பெருமைகளையும் தலைவர்களைப் பற்றியும் நினைவு கூறினார்.

+1 படிக்கும் லட்சுமி பிரியா, +2 படிக்கும் ஜோதிஸ்வரி, 9வது படிக்கும் ஜெயஸ்ரீ ஆகியோர் சுதந்திர தினத்தை பற்றி உரை நிகழ்த்தினர்.

துணை பொது செயலாளர் K.சுந்தரமூர்த்தி, மயிலை செங்குந்தர் மகாஜன சங்கத்தின் நிர்வாகி பூபதி, மாநில சங்க செய்தி தொடர்பு அணி துணை அமைப்பாளர் S.பழனிக்குமார் ஆகியோர் சுதந்திர தின வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழாவில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி ஆகியவற்றில் முதல் 3 இடங்களில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளும் மற்றும் பாராட்டும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

ஆசிரியர் மாயாமதுரை நன்றி கூற நாட்டுப் பண்ணுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

பொன்விழா காணும் பாரம்பரியம்
SINCE 1961
50
NATIONAL
SINCE 1961
NATIONAL
COTTON DHOTIES AND SHIRTINGS
MADE WITH 100% SUPER FINE COTTON
NATIONAL KHADI STORES
2/646 A & 2/646 B, VENUS GARDEN,
MANGALAM MAIN ROAD,
ANDIPALAYAM (PO)
TIRUPUR - 641 687
PHONE:0421 2262180, 2262380
FAX:2262124
EMAIL:khadiking@airtelmail.in

பண்ருட்டி செங்குந்த மகாஜன சங்கத்தின் கூட்டம்

பண்ருட்டி செங்குந்த மகாஜன சங்கக் கூட்டம் 01–08–2021 ஞாயிறு காலை 11.00 மணிக்கு தலைவர் எம்.வேலாயுதம் செங்குந்தர் தலைமையில் பண்ருட்டி தங்க நகை வியாபாரிகள் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மறைந்த செயலாளர் பி.நாராயணசாமி செங்குந்தர், புரவலர் வை.ஆறுமுகம் செங்குந்தர் ஆகியோரின் சிறப்பான பணிகளை நினைவுகூர்ந்து, அவர்களின் படத்திறப்பு விழாவினையும் வழக்கம்போல் நடைபெறும் ஆண்டு விழா மற்றும் மாணவர்களுக்கு பரிசளிப்பு விழாவினையும் பெருந்தொற்று குறைந்தபிறகு தொடர்ந்து நடத்துவது என்றும்,

தற்போது காலியாக உள்ள செயலர் பதவிக்கு ச.தமிழ்ச்செல்வன் செங்குந்தர் அவர்களையும், அவர் வகித்துவந்த பொருளாளர் பதவிக்கு பூ.சுப்பரமணியன் செங்குந்தர் அவர்களையும் தேர்ந்தெடுத்து ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் எம்.வேலாயுதம் செங்குந்தர் அவர்களுடன், இவர்கள் இணைந்து சங்கப் பணிகளை மேற்கொள்ளலாம் என்றும்,

ஏற்கனவே செயலாளர் என்கிற வகையில் அருள்மிகு சோமநாத சுவாமிகள் திருக்கோயிலில் மறைந்த பி.நாராயணசாமி செங்குந்தர், மேற்கண்ட பணிகளான கந்தசஷ்டி உற்சவம், வைகாசி விசாகம், கிருத்திகை உபயம், சோமவார உற்சவம் போன்றவற்றையும், திருக்கோயில் தொடர்பாக நிலுவையில் உள்ள வழக்கினையும் புதிய செயலாளர் திரு.ச.தமிழ்ச்செல்வன் செங்குந்தர் தொடர்ந்து நடத்திடவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூட்டம் நடத்தி செயல்பாடுகள் குறித்து விவாதிக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து புதிய நிர்வாகிகளை வாழ்த்தி அனைவரும் பேசினர். புதிய செயலாளர் மற்றும் பொருளாளர் இருவரும் வாழ்த்துக்களுக்கு நன்றி தெரிவித்து சங்கம் மேலும் பொலிவுபெற சிறப்பாக செய்யப்படுவதாக உறுதி கூறினார்.

பின்னர் புதுப்பேட்டை சிவன் செங்குந்தர் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுபெற்றது!

வழிகாட்டுங்கள்!

பட்டத்தை பிடிக்க சிறுமிக்கு வழிகாட்டுங்கள் குழந்தைகளே!

தெய்வத்திரு. **கே.எம்.கோவிந்தராசனார்** அவர்கள்

நிறுவனர் : கே.எம்.ஜி. கல்வி நிறுவனங்கள்
குடியேற்றம் நகராட்சி முன்னாள் சேர்மன் (1964-1969)
1993-ஆம் ஆண்டு குடியேற்றம் நகரில் 2 நாட்கள் நடைபெற்ற
அகில உலக செங்குந்தர் மகாஜன சங்கத்தின்
மாபெரும் மாநாட்டின் வரவேற்புக்குழு தலைவர்

திருவள்ளுவர் தொடக்கப்பள்ளி
திருவள்ளுவர் மேனிலைப் பள்ளி
கே.எம்.ஜி. கல்வியியல் கல்லூரி
கே.எம்.ஜி. கலை & அறிவியல் கல்லூரி

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் நிரந்தர இணைவு பெற்றது.
பல்கலைக்கழக மானியக்குழுவால் 2(f) மற்றும் 12(B) அங்கீகாரம் பெற்றது.
தேசிய தர மதிப்பீட்டுக் குழுவால் (NAAC) B+ தர மதிப்பீடு பெற்றது.

இளநிலை (UG)

- **B.A** - ஆங்கிலம்
- **B.B.A** - வணிக ஆள்முறையியல்
- **B.Com(General)** - வணிகவியல்
- **B.Com(CA)** - கணினி பயன்பாட்டு வணிகவியல்
- **B.C.A** - கணினி பயன்பாட்டியல்
- **B.Sc** - கணினி அறிவியல்
- **B.Sc** - உயிர்வேதியியல்
- **B.Sc** - நுண்ணுயிரியல்
- **B.Sc** - வேதியியல்
- **B.Sc** - கணிதம்

முதுநிலை (PG)

- **M.A** - ஆங்கிலம்
- **M.Com(General)** - வணிகவியல்
- **M.Com(CA)** - கணினி பயன்பாட்டு வணிகவியல்
- **M.Sc** - உயிர்வேதியியல்
- **M.Sc** - தகவல் தொழில்நுட்பவியல்
- **M.Sc** - கணிதம்
- **M.Sc** - வேதியியல்
- **M.Sc** - பயன்பாட்டு நுண்ணுயிரியல்
- **M.B.A** -

ஆய்வியல் நிறைஞர் (M.Phil)

- **M.Phil** - வணிகவியல்
- **M.Phil** - உயிர்வேதியியல்
- **M.Phil** - கணினி அறிவியல்
- **M.Phil** - கணிதம்
- **M.Phil** - வேதியியல்

முனைவர் பட்டப்படிப்பு (Ph.D)

- **Ph.D** - வணிகவியல்
- **Ph.D** - உயிர்வேதியியல்
- **Ph.D** - நுண்ணுயிரியல்
- **Ph.D** - வேதியியல்

கே.எம்.ஜி கல்வி நிறுவனங்களின் நிர்வாகக் குழு

K.M.G.பாலசுப்பிரமணியன்

K.M.G.சுந்தரவதனம் B.A.,B.G.L.,

K.M.G.இராஜேந்திரன் B.Sc.,M.L.,
வழக்கறிஞர்

K.M.G.முத்துக்குமார் B.Com.,

நேர்மைக்கு கிடைத்த பரிசு

வெகு காலத்துக்கு முன் சிம்மபுரி என்ற நாட்டை மதியோகி என்ற மன்னன் ஆண்டு வந்தார். அவர் நீதி நெறி தவறாதவர்; வாய்மை நிரம்பியவர்;

உண்மை பேசுபவர். தன்னைப் போலவே தன் குடிமக்களும் இருக்க வேண்டும் என்று விரும்புபவர். அவருக்கு திருமணமாகி நீண்ட நாட்களாகியும் குழந்தைகள் இல்லை.

தனக்கு பின் தன் நாட்டை ஆளத் தக்க வாரிசுகள் இல்லாததால், தன் நாட்டு மக்களில் நீதியும், நேர்மையும் தவறாத உண்மையான ஒரு இளைஞனைக் கண்டுபிடித்து, அவனை மன்னனாக்க வேண்டும் என்று விரும்பினார்.

இதற்காக யாருடைய ஆலோசனையையும் நாடவில்லை. அவரே மிகச் சிறந்த அறிவாளியாக இருந்தபடியினால், பல நாட்கள் யோசித்து ஒரு முடிவு செய்தார்.

நாட்டில் உள்ள வீரம் மிக்க இளைஞர்களை அழைத்து வில் போட்டி நடத்தினார். அதில் வென்றவர்களை அழைத்து, வாள் போட்டி நடத்தி பரிசீலனை செய்தார். அதன்பின், வாய் மொழிக் கேள்விகள், சமயோசிதமான கேள்விகள் என்று அவர்களைச் சோதித்தார்.

கடைசியாக, பத்து இளைஞர்கள் தேறினர். அவர்களை மன்னர் அழைத்து, அவர்கள் அனைவரிடமும் தனித்தனியாக ஒரு செடியின் விதையைக் கொடுத்தார்.

"இந்த விதையை ஒரு தொட்டியில் போட்டு வளர்த்து, கவனமுடன் கண்காணித்து, ஆறு மாதம் சென்ற பிறகு, வளர்த்த செடியுடன் என் முன் வர வேண்டும். இது தான் நான் உங்களுக்கு வைக்கக்கூடிய இறுதி கட்டச் சோதனை," என்றார்.

பத்துப் பேரும் அதனை வாங்கிக் கொண்டனர். அதில், கார்முகிலன் என்ற வாலிபன் ஒருவனும் இருந்தான். எல்லாரும் மன்னர் சொன்னபடி அந்த விதையைத் தொட்டியில் போட்டுச் சிறந்த உரங்களையும், எருவையும் இட்டு வளர்க்க ஆரம்பித்தனர்.

கார்முகிலனும் அப்படியே செய்தான். ஆனால், என்ன காரணத்தினாலோ அவனது விதை முளைத்துச் செடியாகவில்லை. மற்றவர்களின் வீட்டுக்குப் போய் அவர்கள் செடி வளர்ந்திருக்கிறதா என்று அவன் கண்காணித்தான்.

என்ன ஆச்சரியம்! மற்றவர்களின் விதையானது நன்றாக முளைவிட்டு, இலை விட்டுச் செழித்து வளர ஆரம்பித்திருந்தது.

வீட்டுக்கு வந்த கார்முகிலன் தன்னிடமுள்ள விதை செடியாக எல்லா விதமான முயற்சிகளையும் செய்தான். ஆனால், என்ன காரணத்தினாலோ, அந்த விதை முளைக்கவில்லை.

"முளைக்காத விதையை ஒரு வேளை மன்னர் தனக்குத் தந்திருப்பாரோ?' என்று எண்ணினான். மறுகணமே, "ச்சே... என்ன மோசமான எண்ணம்... எல்லாருக்கும் கொடுத்தது போலத்தான் எனக்கும் கொடுத்தார். என் விதை முளைக்கவில்லை என்றால், அது என் துரதிருஷ்டம். மற்றவர்கள் விதை எல்லாமே முளைத்திருப்பது அவர்களுடைய அதிர்ஷ்டம்.

"ஆறு மாதம்வரை பொறுத்திருந்து பார்ப்போம்... அப்போதும் விதை முளைக்காவிட்டால், "அரசே, என் விதை மட்டும் முளைவிக்கவில்லை!' என்று உண்மையைக் கூறி விடுவோம். அதற்காக மன்னர், நான் சரியாக செடியைப் பராமரிக்கவில்லை என்று கருதி எனக்குத் தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்வோம்!' என்று கருதினான்.

ஆறு மாதம் சென்றன.

வெற்றிப் பெருமிதத்துடன் மீதியுள்ள ஒன்பது பேரும் தங்கள் கையில் தொட்டியை ஏந்தி வந்தனர். அதில் இரண்டடி நீளத்துக்குச் செடி வளர்ந்திருந்தது. அது ஆரோக்கியமாக இருந்தது.

மன்னர் எல்லாருடைய தொட்டிகளையும் பார்த்துக் கொண்டே வந்தார். அவர் இதழ்களுக்கிடையில் புன்முறுவல் ஒன்று நெளிந்தது. கார்முகிலனிடம் வந்ததும் அவன் காலித் தொட்டியுடன் நிற்பதைக் கண்டவுடன் மன்னர் முகம் மாறியது.

நடுநடுங்கிப் போனான் கார்முகிலன். அவனையே உற்றுப் பார்த்த மன்னர் அவனிடம் அதிகாரமாக கேட்டார்,

"உன்னுடைய பெயர் என்ன?"

"என் பெயர் கார்முகிலன் அரசே! தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும். நான் ஆறு மாத காலமாக இந்த விதையைச் செடியாக்க எவ்வளவோ பாடுபட்டேன். ஆனால், உண்மையிலேயே என்னால் அதைச் செடியாக்க முடியவில்லை. என்னை நம்புங்கள் அரசே!" என்று மண்டியிட்டு கதறினான்.

மன்னர் கீழே குனிந்து அவனைத் தூக்கி நிறுத்தித் தன் மார்போடு அணைத்துக் கொண்டார்.

"எதிர்கால மன்னனைத் தேர்ந்தெடுக்கவே இப்போட்டிகளை வைத்தேன். அதில் வென்றவனாக இந்த கார்முகிலனை அறிவிக்கிறேன். இவன்தான் எதிர்கால மன்னன்!" என்றார்.

இதைக் கேட்ட அனைவரும் வியப்படைந்தனர்.

முதல் மந்திரி எழுந்து, ""அரசே, தாங்கள் சொன்னபடி ஒரு செடி கூட வளர்க்கத் தெரியாத இந்த வாலிபனா எதிர்கால மன்னன்? மன்னருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து செடியைக் கண்ணும் கருத்துமாகப் பராமரிக்காமல் சோம்பேறித்தனமாக இருந்து விட்டு, வெறும் பூந்தொட்டியைக் காட்டிய இவனா இந்த நாட்டு மன்னன்?" என்று கேட்டார்.

"அமைச்சரே, நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டீர்கள். இவன் அவனால் ஆகக் கூடிய முயற்சிகளை எல்லாம் செய்து பார்த்தான் என்பதை நான் நம்புகிறேன். ஏன் தெரியுமா? நான் பத்து இளைஞர்களுக்கும் செடி வளர்க்கக் கொடுத்த பத்து விதைகளும் நன்றாக வேக வைக்கப்பட்டு உலர்த்தப்பட்ட விதைகள்.

"அதில் எந்தச் செடியும் முளைக்காது. என்னிடமிருந்து பரிசுகளோ, பதவியோ பெறுவதற்காக மற்ற இளைஞர்கள் வேக வைக்கப்பட்ட விதைகளைத் தூக்கி எறிந்துவிட்டு, அதற்குப் பதிலாக அதே போன்ற நல்ல விதைகளை வாங்கிப் பயிரிட்டுச் செடிகளாக்கிக் கொண்டு வந்திருக்கின்றனர்.

"ஆனால் கார்முகிலனோ அப்படிச் செய்ய வில்லை. அரச கட்டளையை ஏற்று ஆறு மாத காலம் போராடிப் பார்த்திருக்கிறான். விதை முளைக்கவில்லை என்றதும், அதை உள்ளபடியே என்னிடம் அறிவிக்கக் காலித் தொட்டியுடன் வந்தான்.

"உண்மையைச் சொல்லும்போது என்னால் அவனுக்குத் தண்டனை ஏற்பட்டால் கூட அதைத் தாங்கச் சித்தமாயிருந்திருக்கிறான் என்பதை அவன் செயல், பார்வை, பேச்சு, வார்த்தை, நடத்தை மூலம் அறிந்து கொண்டேன்.

"இப்படி நேர்மையாக நடந்து கொண்டதன் மூலமாக அவனால் நிச்சயம் நாடு செழிக்கும்' என்றுதான் அவனை மன்னனாக அறிவித்தேன்.

மன்னரின் அறிவுக் கூர்மையை எண்ணி அனைவரும் வியந்து பாராட்டினர். அங்கிருந்த செடி வளர்த்த ஏனைய இளைஞர்கள் அரசனிடம் மன்னிப்புக் கோரினர். அரசனும் அவர்களை மன்னித்தார்.



ராணா. K.V.லட்சுமணன் 21ஆம் ஆண்டு நினைவு தினம்

03.08.2021 அன்று நமது செங்குந்தர் குலத்தின் மூத்த முன்னோடி செங்குந்தர்கள் மட்டுமல்லாது மாற்று சமுதாயத்தினரும் போற்றக்கூடிய ஈரோட்டின் பெருந்தலைவர், ஜாதி மதம் பார்க்காமல் பலரது வாழ்க்கையில் ஒளியேற்றிய உத்தமர் ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு இந்து கல்வி நிலையம் மற்றும் முதலியார் கல்வி நிறுவனங்களின் முன்னாள் தலைவர், இன்முக தென்றல் தெய்வத்திரு ராணா. K.V.லட்சுமணன் அவர்களின் இருபத்தி ஒன்றாம் ஆண்டு நினைவு தினத்தில் ஈரோடு இந்து கல்வி நிலையத்தில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு ராணா K.V.லட்சுமணன் குடும்பத்தினர், ஈரோடு மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தினர், சமுதாய பொருளாதார தொண்டு மன்ற நிர்வாகிகள் மற்றும் செங்குந்த சொந்தங்கள் அனைவரும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

M.P. நாச்சிமுத்து M. ஜெகநாதன் பொறியியல் கல்லூரி

சுத்தானந்தன் கல்வி நகர்,
சென்னிமலை, ஈரோடு - 638 112.

Phone : 04294 - 250242, 250220, 251617
E-mail : mpnmjec@mpnmjec.ac.in Visit us at : www.mpnmjec.ac.in

'உத்யோக் ரத்னா'
திரு. ஜெ. சுத்தானந்தன் B.Sc.
நிறுவனர்

Counselling Code
2713

'பாரத் வித்யா சிரோமணி'
Dr. வசந்தா சுத்தானந்தன் M.A., B.Ed.
தாளாளர்

B.E.
- Civil Engineering
- Computer Science Engineering
- Electronics and Communication Engineering
- Electrical and Electronics Engineering
- Mechanical Engineering

B.Tech. I.T.

M.E.
- CAD / CAM
- Computer Science and Engineering
- Power Systems Engineering
- Structural Engineering
- VLSI - Design

கல்விச் சேவையில் 35 வருடங்கள் MPNMJEC

M.B.A
M.C.A

Placement Record 394 Offers

தொடர்புக்கு : 98652 33600, 98655 33800, 98655 33700, 73736 44088

கல்வெட்டுக்களில் கைக்கோளப்பெரும்படை

2. அ. மூத்த வாள் பெற்ற கைக்கோளப்படை

உடையார்குடி அனந்தேசுவரர் கோயில் கல்வெட்டு ஒன்றில் மூத்த வாள் பெற்ற கைக்கோளப்படை குறிக்கப்பெற்றுள்ளது. இப்படையும் முதற் பராந்தகன் காலத்தில் வீரப்பணி புரிந்த திறத்தை அறிகிறோம். 'மூத்த வாள்' பெற்ற என்ற தொடர் "Special honour or rank of the regiment by the king" என்று கல்வெட்டறிஞர்களால் விளக்கப்பெறுகிறது. ஒருசார் அறிஞர்கள் வாள் பயிற்சியில் அவர்களுக்கு இருந்த அனுப வத்தை இத்தொடர் சுட்டுவதாகக் கருதுகின்றனர், இப் படையைச் சேர்ந்த அரையன் வேங்கடவன் என்ற வீரன் அனந்தேசுவரருக்கு நாள்தோறும் நொந்தா விளக்கெரிப்பதற்கு 12/2 கழஞ்சு பொன் வழங்கிய செய்தியையும் இப்பொன்னால் 96 ஆடும் தகர் ஒன்றும் கொண்டு நாள்தோறும் ஓர் உழக்கு நெய் அளப்பதற்கு இவ்வூர் மன்றத்தினர் பொறுப்பேற்ற செய்தி யையும் அறிகிறோம் (S.I.I. Vol.XIX, No.18). ''வாள்'' என்ற சொல் கல்வெட்டுக்களில் வாழ்'' என்று வெட்டப்பெற்றுள்ளது. இப் பிழை செதுக்கியவர் உச்சரிப்புப் பிழையால் நேர்ந்திருத்தல் வேண்டும், இன்றும் ழ், ள் அபேதமாகப் பேச்சு வழக்கில் வழங்குதல் காணலாம்.

மேற்சுட்டிய கல்வெட்டினைச் சார்ந்து வரும் கல்வெட்டும் அதே படையைச் சேர்ந்த வித்யாபரன் என்னும் வீரன் சந்திரசேகரர்க்கு நொந்தாவிளக்கு எரிப்பதற்கு 1272 கழஞ்சு பொன் வழங்கிய செய்தியைச் சுட்டுகிறது (S.I.I.Vol.XIX, No. 19). ந.IV.5.

3. கண்டராதித்தத் தெரிஞ்ச கைக்கோளப்படை [கி.பி. 950-957]

கண்டராதித்தன் முதல் பராந்தகனின் இரண்டாம் புதல்வன். பெரு வீரம் படைத்த சிறந்த சிவநேசச் செல்வன். தில்லைக்கோயிலைப் பற்றி இவன் பாடிய திருவிசைப்பா ஒன்பதாம் திருமுறையில் தொகுக்கப் பெற்றுள்ளது. இவனைச் சிவஞானக் கண்டராதித்தர் என்று போற்றுவர். இவன் காலத்தில் பணியாற்றிய கைக்கோளப்பெரும்படையினர் இவன் பெயரி னால் சுட்டப்பெற்றனர். இவன் காலத்தில் கும்பகோணம் நாகேசுவரர் கோயிலின் மேற்குச் சுவரிலும் தெற்குச் சுவரிலும் கி.பி. 22–4–975–இல் வெட்டப்பெற்ற கல்வெட்டில் இப் படையைச் சேர்ந்த தஞ்சாவூர் அறிவாளன் அமித்திர வல்லி என்பவன் தன் புதல்வன் காரிகோழம்பன் சார்பாகத் திருக்குட மூக்கில் திருக்கீழ்க்கோட்டத்துப் பரமசுவாமி கோயிலுக்கு நிலம் வழங்கிய செய்தி பொறிக்கப் பெற்றுள்ளது. அரசனுடைய முடிசூட்டு விழாக்காலத்தில் அபிஷேகத் தட்சணையாக அவ்வூர்ச்சபையால் அந்நிலம் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று அறிகிறோம் (S.I.I. Vol.XIX, No. 95).

பேராசிரியர் முனைவர் சோ.ந.கந்தசாமி

4. கரிகாலச்சோழத் தெரிஞ்ச கைக்கோளப்படை [கி.பி. 966-969]

பிற்காலச்சோழர் வரலாற்றில் கரிகாலன் என்ற பெயர் இரண்டாம் பராந்தகனின் முதல் மைந்தனும் முதலாம் இராசராசனின் தமையனுமாகிய ஆதித்த கரிகாலனுக்கும் உரியதாகக் கல்வெட்டுக்களில் வழங்குகிறது. மயிலாடுதுறை வட்டத்தைச் சேர்ந்த திருவிளங்குடி என்ற ஊரில் திகழும் மண வாளேசுவரர் கோயிலின் தெற்குப்புறச் சுவரிலுள்ள கல்வெட்டு உத்தம சோழனின் காலத்தில் (கி.பி. 12–4–969) செதுக்கப்பெற்றுள்ளது. இக்கல்வெட்டில் சுட்டப்பெறும் கரிகாலச் சோழத்தெரிஞ்ச கைக்கோளப் படையைச் சேர்ந்த அரையன் என்ற வீரன் 50 ஈழக்காசு செலுத்தி வேள்விக்குடி இறைவனுக்கு நிலம் வாங்கி இறையிலியாக வழங்கிய செய்தி குறிக்கப்பெற்றுள்ளது. கரிகால்சோழன் என்ற பெயர் அறியப் பெறுவதால் இப்படை மறவர்கள் அச்சோழன் காலத்தில் பணியாற்றியவர்கள் ஆவர் (S.I.I.Vol. XIX, No.27).

காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள சொக்கீஸ்வரர் கோயில் தென் புறச்சுவரில் வெட்டப்பட்ட கல்வெட்டு மூத்த வாள் பெற்ற கைக்கோளப் படையைச் சுட்டுகிறது. இப்படையைச் சேர்ந்த ஆச்சான் சேனாச்சான் என்னும் படைத்தளபதியிடம் காஞ்சிபுர நகரத்தினர் 300 குழி நிலத்தை விற்ற செய்தியும் அப்படைத்தலைவன் அந் நிலத்தினைத் தெற்கிருந்த நக்கர் கோயிலில் கரிகால சோழப் பிள்ளையார்க்கு நிவேதனங்கள் வழங்குவதற்காக நிவந்தம் அளித்த செய்தியும் குறிக்கப்பெற்றுள்ளன. மேலும் மூலவர் கோயிலின் விளக்கெரிப்பதற்கு மூன்று பழங்காசுகள் கொடுத்த செய்தியும் சுட்டப்பெற்றுள்ளது. இக் கல்வெட்டு உத்தம சோழன் காலத்தைச் சேர்ந்ததாகலாம் என்று பதிப்பாசிரியர் கருதுகிறார். எனினும், இக்கல்வெட்டில் கரிகால சோழப்பிள்ளையார் என்று கூறப்பெறுவது, இப்படை மறவர்கள் ஆதித்த கரிகாலனின் காலத்தில் பணியாற்றியவர் என்று எண்ணுதற்கு இடம் உண்டு.

5. மதுராந்தகத் தெரிஞ்ச கைக்கோளப்படை [கி.பி. 970-985]

மதுராந்தகன் கண்டராதித்தனின் மகன் ஆவான். இவனுக்கு உத்தமசோழன் என்ற பெயரும் உண்டு. இவன் தாய் சிறந்த சிவநேசச் செல்வியாகிய செம்பியன் மாதேவி. பாண்டிய நாட்டவர்களுக்கு அந்தகன் போல் இருந்ததால் இவனை மதுராந்தகன் என்று வழங்கியிருத்தல் வேண்டும். –

தஞ்சை மாவட்டம் பண்டாரவாடைக்கு அருகில் திகழும் தேவராயன்பேட்டை மச்சபுரீஸ்வரர் கோயில் கல்வெட் டொன்றில் மதுராந்தகத் தெரிஞ்ச கைக்கோளப் படையைச் சேர்ந்த கோயில் நிலாவஞ்சி என்னும் வீரன் திருச்சேலூர் மகாதேவர் கோயிலில் நொந்தாவிளக்கு எரிப்பதற்கு நிவந்தம் வழங்கிய செய்தி குறிக்கப்பெற்றுள்ளது (S.1.1. Vol. XIX. 284). இக் கல்வெட்டினை உத்தமசோழன் காலத்தது என்று தெளிவாகப் பதிப்பாசிரியர் குறித்துள்ளார்.

– தொடரும்

மண்டபத் திறப்புவிழா அழைப்பிதழ்

21.08.2021 சனிக்கிழமை அன்று திருப்பூரில் தெ.செ.ம.சங்கத்தின் தலைவர் கைத்தறிக்கதிரவன் K.P.K.செல்வராஜ் அவர்களை மதுரை திருவாப்புடையார் கோயில் செங்குந்தர் உறவின்முறை மகமை நாட்டாண்மைக்காரர் ச.இரத்தினசபாபதி , செயலாளர் வே.ஆறுமுகம், P.ராஜ்குமார், V.C.விஜயசேகரன் ஆகியோர் நேரில் சந்தித்து திருவாப்புடையார் கோவில் செங்குந்தர் மண்டபத்தின் திறப்புவிழா அழைப்பிதழை வழங்கினார்கள்.

16.08.2021 அன்று சென்னையில் தெ.செ.ம.சங்கத்தின் தலைவர் கைத்தறிக்கதிரவன் K.P.K. செல்வராஜ் அவர்களை ஆன்மிக அணி துணை அமைப்பாளர் S.சுரேஷ்பிரியன் அவர்கள் நேரில் சந்தித்து தமது திருமண அழைப்பிதழை வழங்கினார்.

மஹா கும்பாபிஷேக விழா அழைப்பிதழ்

திருப்பூரில் 04.08.2021 புதன்கிழமை அன்று தெ.செ.ம.சங்கத்தின் தலைவர் கைத்தறிக் கதிரவன் K.P.K.செல்வராஜ் அவர்களை நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம், இராஜாக்கவுண்டம்பாளையம் கோயில் நிர்வாகிகள் ,செங்குந்த முதலியார் பாவடி பஞ்சாயத்து அருள்மிகு விநாயகர், அருள்மிகு முத்துகுமாரசுவாமி, அருள்மிகு இடும்பன் சுவாமி, அருள்மிகு நவகிரஹங்கள் அமைந்த திருக்கோயில் மஹா கும்பாபிஷே விழா அழைப்பிதழை நேரில் சந்தித்து வழங்கினார்கள்.

சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ

உ
திருச்சிற்றம்பலம்

அலகாபாத் (பிரயாகை) காசி, கயா, புத்தகயா, அயோத்யா, நைமிசாரண்யம், சித்ரகூடம் யாத்திரை – ரூ. 9999/–
நாள் : 16–09–2021 முதல் 11 நாட்கள்

ஐந்து ஜோதிர்லிங்கம், மும்பை, சீரடி & அஷ்ட விநாயகர், பண்டரிபுரம் யாத்திரை
நாள்: 18.10.2021 முதல் 29.10.2021 வரை
12 நாட்கள் ரூ. 11,700/-

பத்ரிநாத் & கேதார்நாத் யாத்திரை
நாள்: 30.09.2021 முதல் 13 நாட்கள் – ரூ. 13,500/-
மேலும் தரிசிக்கும் தலங்கள்: மதுரா, ஆக்ரா, கோகுலம், டில்லி, குருக்ஷேத்திரம், ஹரித்துவார், ரிஷிகேசம், தேவபிரயாகை, ஜோஷிமட், [5 திவ்ய தேசங்கள் தரிசனம் செய்யும் வாய்ப்பு]

பஞ்சதுவாரகா & மூன்று ஜோதிர்லிங்க யாத்திரை
நாள்: 8.11.2021 முதல் 12 நாட்கள் – ரூ. 11,700/-

மலைநாட்டு 13 திவ்ய வைணவத் தலங்கள்
குருவாயூர் & கேரள சபரிமலை யாத்திரை - ரூ. 5400/-
நாள்: 15.08.2021 முதல் 19.08.2021 முடிய 5 நாட்கள்

ஆடி அமாவாசை இராமேஸ்வரம் & பாண்டியநாட்டு 18 திவ்ய வைணவத் தலங்கள் யாத்திரை – ரூ. 4500/– [பகுதி -9]
நாள்: 5.08.2021 முதல் 8.08.2021 முடிய 4 நாட்கள்

மலர்கள் தேவை 100% சுத்தமான Cash & Carry
ஜெய்'ஸ்
தரமான வெண்ணெய் & நெய் கிடைக்கும்.
செங்கினால் ஆட்டிய நல்லெண்ணெய், கடலை எண்ணெய்,
தேங்காய் எண்ணெய், தேன் & நாட்டு சர்க்கரை கிடைக்கும்.
14/36, புதுத்தெரு, சிதம்பரம். Cell: 94429 79505, 89405 30294

தொடர்பு முகவரி:
சிவ. ஆர்.எஸ்.நாதன் டூர்ஸ்
14/36, புதுத்தெரு, சிதம்பரம் – 608 001.
Ph: 04144 - 355624,
Cell: 94436 79282, 94436 65926

சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ

ACTION
EXPLORE
ACHIEVE
VALLAL SABAPATHY
MATRIC HR. SEC. SCHOOL
ADMISSION OPENS....
VALLAL SABAPATHY
MATRIC.HR.SEC.SCHOOL
VALLAL SABAPATHY
MATRIC.HR.SEC.SCHOOL
No.25, HARRINGTON ROAD, CHETPET, CHENNAI - 600030.
Phone : 044 - 2668 0662, 4295 7999

COURSES OFFERED IN HIGHTER SECONDARY

I - Physics, Chemistry, Maths, Biology

II - Physics, Chemistry, Maths, Computer Science

III - Commerce, Accountancy, Economics, Business Maths

IV - Commerce, Accountancy, Economics, Computer Applications

வாரியார் சுவாமிகள் 116வது பிறந்த நாள் விழா

வள்ளல் சபாபதி மெட்ரிக் பள்ளி

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பாக, திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின், 116–வது பிறந்தநாள் மற்றும் அன்னதான விழா, சென்னை வள்ளல் சபாபதி மெட்ரிக் மேல்நிலை பள்ளி வளாகத்தில் சிறப்புற நடைபெற்றது. அதுசமயம், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க பொதுச்செயளாளர், R.P.குமரகுருபரன் தலைமையேற்று சிறப்புரை ஆற்றினார்கள். தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க பொருளாளரும், மதுரை மாவட்ட செங்குந்த மகாஜன சங்க தலைவருமான R.காந்தி அவர்கள் வாழ்த்துரை வழங்கி, அன்னதான நிகழ்ச்சியை தொடங்கி வைத்து, விழாவினைச் சிறப்பித்தார்கள். மற்றும் சங்க நிர்வாகிகளும், பள்ளி ஆசிரிய பெருமக்களும், மாணவச் செல்வங்களும் திரளாக, நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

பொதட்டூர்பேட்டை

திருவள்ளூர் மாவட்டம் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் பொதட்டூர்பேட்டை நகரம் சார்பில் நகரதலைவர் A.R. சுப்பிரமணியம் தலைமையில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்களின் பிறந்தநாள் விழா 25–8–2021 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாவட்ட பொருளாளர் P.N. மாணிக்கம் E.S.T.பக்தவத்சலம், N.K.நரசிம்மன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். K.K.சிவா, O.K.N.சிவா, M.S.வேலன், D.A.மணி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் பொதுமக்கள் 100 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாக நம் குலகுருவான திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள் பிறந்ததின விழா மாவட்டத்தில் காஞ்சிபுரம், நாயகன்பேட்டை, குருக்குப்பேட்டை ஆகிய இடங்களில் நடைபெற்றது. இவ்விழாக்களில் மாவட்டத் தலைவர் S.பெருமாள், செயலாளர் V.ஜீவரத்தினம், பொருளாளர் D.தணிகாசலம், தலைமைச் சங்க செயற்குழு உறுப்பினர்கள் பூ.ரவிச்சந்திரன், T.குமரவேல் மற்றும் முன்னாள் மாநிலத் துணைத் தலைவர் கு.ப.கண்ணன், முன்னாள் மாவட்ட பொருளாளர் K.குமரவேல் ஆகியோரும் நம் குல பெருமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

